Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 | பங்குனி 30 | புதன்கிழமை | (13.04.2011) | பக்கங்கள் 12+IV | ஓசை – 196

(C/604) Job! With High Salary



Follow

Cima_UK, BIT

(O/L,A/L not necessary)

MCS 324,Palaly Road,Parameswara Junction www.mcsitcampus.org

SMS your name & course to 772 395 895 & Get Schol.

## யாழ். நகர் களைகட்டுகிறது



(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் புதுவருட வியாபாரங்கள் களைகட்டியுள்ளது. புதுவருடத்திற்காக பொருட்களைக் கொள்வனவு செய்வதில் மக்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதனை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

வெளிமாவட்டத்திலிருந்து பெருமளவிலான அங்காடி வியாபாரிகள் வருகைதந்து யாழ். நகரப்பகுதியில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபடுவதனை (11 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் டெங்கு பூரண கட்டுப்பாட்டில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட ஒருவார கால சோதனை நடவடிக்கைகளில் டெங்கு நோயின் தாக்கம் பூரண கட்டுப்பாட்டில் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபையினர் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட சுமார் 200 வரையான வீடுகள், பொது நிறுவனங்கள், ஆலயங்கள், வெற்றுக் கிணறுகள் முதலியவற்றில் இச்சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த 4 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையான ஒருவார காலப்பகுதியிலேயே யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரால் இச்சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இச்சோதனை நடவடிக்கைகளின் போது டெங்கு (12 ஆம் பக்கம் பார்க்க)

# அபிவிருத்திக்கு குந்தகம்; மேற்குலகு மீது குற்றம்

## இலங்கையுடன் கைகோர்க்கிறது பலஸ்தீனம்

(காஸா)

**இலங்கை அரசு மீது பல்வேறு அழுத்தங்களைப் பிரயோகித்தும் அளவுக்கதிகமாக குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியும் அதன் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் மேற்குலக நாடுகள் குந்தகம் ஏற்படுத்தி வருவதாக பலஸ்தீன அரசு குற்றம் சுமத்தியுள்ளது. எத்தகைய குற்றச்சாட்டுக்களை சர்வதேச சமூகம் இலங்கை அரசு மீது சுமத்தினாலும், இலங்கை அரசுடன் இணைந்து செயற்படுவதற்கு தாம் தயாராக இருப்பதாக பலஸ்தீன அரசாங்கம் அறிவித்துள்ளதாக 'ஏசியன் ரிபியூன்' என்ற இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.**

இலங்கையின் யுத்தம் இடம்பெற்ற காலத்திலும், அதற்குப் பின்னர் யுத்தம் முடிந்த காலத்திலும் பலஸ்தீன அரசு இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட்டதாகவும், தற்போது மேற்குலக நாடுகள் இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் முயற்சிகளில் தீவிரம் காட்டி வருகின்றன என்றும் இதன்மூலம் இலங்கை போன்ற நாடுகளைத் துண்டாடுவதற்கு அவை முயற்சிக்கின்றன என்றும் பலஸ்தீன அரசு மேற்குலகம் மீது கடும் சீற்றத்துடன் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொழும்பு - பம்பலப்பிட்டியில் அமைந்திருக்கும் ஆடையகத்துக்கு நேற்று திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வந்திருந்த மக்களிடம் சுகம் விசாரித்து தனது சந்தோஷத்தைப் பகிர்ந்து கொண்டார்.

## மன்னார் மணல் திட்டு இப்போது சொர்க்கபுரி

### படையெடுக்கும் உல்லாசப் பயணிகள்

(கொழும்பு)

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் அமைந்துள்ள இரண்டாவது மணல் திட்டிக்கு உல்லாசப் பயணிகளை அழைத்துச் செல்லும் படகுச் சேவையை கடற்படையினர் ஆரம்பித்துள்ளனர்.

இந்தப் படகுச் சேவையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு கடந்த 10ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. இந்நிகழ்வில் கடற்படையின் வடமத்திய பிராந்திய (11 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் உதவிக்கு ஜப்பானிய அரசு பாராட்டு

(கொழும்பு)

ஜப்பானில் ஏற்றட்ட அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கியமைக்காக இலங்கை அரசாங்கத்திற்கு, ஜப்பான் அரசாங்கம் நன்றி பாராட்டியுள்ளதாக இலங்கைக்கான ஜப்பானிய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது

அனர்த்த நிலைமை தமது நாட்டுக்கு ஏற்பட்ட போது இலங்கை அரசாங்கம் வழங்கிய ஒத்துழைப்பிற்கு நன்றி பாராட்டுவதாக ஜப்பானிய பிரதமர் நாஓட்டோ கான் தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் ஆயுதத் தொழிற்சாலை பொலிஸார் முற்றுகையிட்டு சோதனை

(கொழும்பு)

சட்டவிரோத ஆயுதத் தயாரிப்பை மேற்கொண்டிருந்த தொழிற்சாலையொன்று கொழும்பில் நேற்று முன்தினம் நள்ளிரவு பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் அதனையண்டிய பிரதேசங்களுக்கு சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் கள்ளச்சாராயம் என்பவற்றை விநியோகிக்கும் மையமாக பிரஸ்தாப தொழிற்சாலை செயற் (11 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்பரப்பில் முப்பரிமாண ஆய்வு; நவீன ஆய்வுக் கப்பல் கொள்வனவு



(கொழும்பு)

இலங்கையைச் சூழவுள்ள கடற்பரப்பு முப்பரிமாண ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளது. இலங்கையின் கடல் வளங்களை துல்லியமாக அடையாளம் காணும் முயற்சியாகவே இந்த கடல் ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த ஆய்வின் முதற்கட்டமாக புதிய கப்பல் ஒன்று கொள்வனவு செய்யப்படவுள்ளது.

நவீன ஆய்வு வசதிகளைக் கொண்ட கப்பல் ஒன்றை வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. நானாவித செயற்பாடுகளைக் கொண்டுள்ள கப்பல் ஒன்றை வாங்கும் நடவடிக்கைகளை இலங்கை தேசிய நீர்வள அமைப்பு மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசியாவின் இயற்கை அனர்த்தம்; சீனா எச்சரிக்கை மணி அடிக்கும்

(கொழும்பு)

செய்மதியின் ஊடாக கால நிலை தொடர்பான தகவல்களை வானொலி ஒலிபரப்பு மூலம் ஆசிய நாடுகளுக்கு விஸ்தரிக்க சீன அரசாங்கம் முன்வந்துள்ளது.

இதற்கு அமைய நேற்று முன்தினம் சீன அரசாங்கத்தின் சார்பில் சீன வளிமண்டல மற்றும் தகவல் பிரிவினர் தமது சேவையினை ஆரம்பித்துள்ளனர்.

இதன் அடிப்படையில் ஆசியாவை சேர்ந்த 16 நாடுகள் பலன் அடையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஒலிபரப்பு வசதி மூலம் இலங்கை, பங்களாதேஷ், இந்தோனேசியா, கிர்கிஸ்தான், லாவோஸ், மலேசியா, மாலைதீவு மங்கோலியா, மியன்மார், நேபாளம், பாகிஸ்தான், (11 ஆம் பக்கம் பார்க்க)

# வலி.வடக்கு மக்களின் மீள்குடியமர்வுக்கு அக்கறையுடன் உழைப்பவர் அமைச்சர் டக்ளஸ்

## தெல்லிப்பளைப்பிரதேச செயலர் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளை விடுவிப்பது மற்றும் அப்பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்துவது போன்ற நடவடிக்கைகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தீவிர கவனம் செலுத்தி அக்கறையுடன் உழைத்து வருகின்றார் என தெல்லிப்பளை பிரதேச செயலர் திரு. முரளிதரன் தெரிவித்தார்.

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சுதந்திரபுரம் பகுதியில் யு.என்.டி.பி. நிறுவனத்தினரால் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வீடுகளை கையளிக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசின் திட்டத்திற்கமைய யு.என்.டி.பி. நிறுவனத்தினரின் நிதியுதவியுடன் கட்டி முடிக்கப்பட்ட 70 வீடுகள் மற்றும் பொது மண்டபம், தபாலகம் ஆரம்ப சுகாதார நிலையம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கிராம சேவையாளர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் அலுவலகங்களும் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக மக்களின் தேவைகளை இலகுவான முறையில் நிவர்த்தி செய்யும் பொருட்டு அமையப் பெற்றுள்ள இக்கட்டிடங்களை மனித வாழ்வியலுக்கும் முன்னேற்றத்திற்கும் பயன்படும் வகையில் பாவித்துக் கொள்ள வேண்டும்.

இப்பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக இருக்கின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலைமையில் இப்பகுதியில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முக்கியமாக உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளை விடுவிப்பது மற்றும் அப்பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்துவது போன்ற நடவடிக்கையிலும் அவர்களது வாழ்வாதார பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதிலும்அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தீவிர அக்கறையுடன் அல்லும் பகலும் உழைத்து வருவதன் பயனாகவே இன்று வீடுகள் மற்றும் கட்டிடங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

மாணவர்களது கல்விச் செயற்பாடுகள் மூலமே எதிர்கால வளமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொண்டு, அதற்கேற்ப கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை சரிவரப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

முன்பதாக இன்றைய நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் ஏனைய விருந்தினர்களும் வசாவிளான் சுதந்திரபுரம் சந்தியிலிருந்து மாணவர்களின் இசை அணி வகுப்புடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

அங்கு மங்கள விளக்கு ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து பெயர் பலகையினை அமைச்சர் திரைநீக்கம் செய்து வைத்ததுடன்,மாநாட்டு மண் டபத்தையும் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார்.

இதேபோன்று வசாவிளான் அஞ்சலகத்தை திறந்து வைத்த அமைச்சர், அதன் பணிகளையும் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

அத்துடன் பொதுநூலகம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையம், குடும்ப சுகாதார நிலையம் கிராம அலுவலர் மற்றும் சமுர்த்தி அலுவலர் அலுவலகங்களையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் திறந்து வைத்ததுடன் புதிய வீடொன்றையும் கையளித்தார்.



அத்துடன் துறைசார்ந்த அதிகாரிகளிடம் திறந்து வைக்கப்பட்ட திணைக்களங்களின் தேவைகள், கோரிக்கைகள் தொடர்பாகவும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

யு.என்.டி.பி. நிறுவனத்தின் நிதியுதவியுடன் 92 வீடுகள் கட்டப்பட வேண்டிய நிலையில் இதுவரையில்,70 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு அவை உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. ஓவ்வொரு வீடும் சுமார் 650000 பெறுமதிவாய்ந்தவை என்பதுடன், ஏனைய 22 வீடுகளும் ஆறு மாத காலத்திற்குள் கட்டி முடிக்கப்படவுள்ளன.

பொது மண்டபத்தில் தெல்லிப்பளை பிரதேச செயலர் திரு.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திறந்து வைக்கப்பட்ட துறைசார்ந்த திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து பொதுக்கட்டிடங்களுக்கான சான்றிதழ்களையும் வீட்டு உரிமையாளர்களுக்கு வீடுகளை கையளிக்கும் உரிமைப் பத்திரங்களையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கி வைத்து சிறப்புரையாற்றுகையில் மக்களின் போக்குவரத்துச் சேவை, முன்பள்ளிச் சிறார்களின் கற்றல் செயற்பாட்டுத் திட்டங்கள் வைத்திய சேவைகள் தொடர்பில் கவனமெடுக்கப்படுமெனவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் திணைக்களங்களின் துறைசார்ந்த அதிகாரிகள் யு.என்.டி.பி. நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோருடன் ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் பிரதேச இணைப்பாளர் எஸ் பாலகிருஷ்ணன் ஜீவன் ஈ.பி.டி.பி.யின் வலி வடக்கு பிரதேச அமைப்பாளர் அன்பு உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# மக்கள் வங்கியின் அதிஷ்டசாலி யார்?

## புதுவருட சீட்டிழுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள 13 மக்கள் வங்கி கிளைகளில் புதுவருடப் பிறப்பு நாளன்று வனிதா வாசனா, ஆஷ்சர்ய சேமிப்பு சான்றிதழ்களுக்கான அதிஷ்டசாலியை தேர்தெடுக்கும் நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி கிளை சீட்டிழுப்பில் மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், ஸ்ரான்லி வீதி கிளை சீட்ழுப்பில் வைத்தியகலாநிதி துஷியந்தி துசிதரன், சுன்னாகம் கிளைசீட்டிழுப்பில் உள்ளூராட்சி திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், பருத்தித்துறை கிளையில் வைத்திய அதிகாரி எஸ். நந்தகுமார், காங்கேசன் துறை கிளையில் வைத்தியகலாநிதி எல்.ஜே.நோபேட் எமில், சங்கானை கிளையில் வலிமேற்கு பிரதேச செயலர் தேவந்தினி பாபு, சாவகச்சேரி கிளையில் டிபேக் கொலிச் பிரதி அதிபர் ஜுட்சி ராஜு, அச்சுவேலி கிளையில் வைத்திய கலாநிதி விஜயலக்சுமி சபாரட்ணம், வல்வெட்டித்துறை கிளையில் கருணாகரன் பவானி உபதபாலதிபர். வல்வெட்டித்துறை, நெல்லியடி கிளையில் அரியமலர் நேசராஜா கிராமியவங்கி முகாமையாளர், பிரதான வீதி கிளையில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வசந்திமாலா சிவபாலன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். (கா)


தமிழ், சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு
மிகப் பிரமாண்டமான விசேட தள்ளுபடி

மருத்துவ நூல்களுக்கு 10% முதல் 30% வரையான விலைக்கழிவு

அகராதிகள்10% முதல் 20% வரையான விசேட தள்ளுபடி

காமிக்ஸ்வெளியீடுகள் 20% விலைக்கழிவு

பாடசாலை மாணவர்களுக்கான புதிய பாடத்திட்டத்திற்கேற்ற புதிய பயிற்சி நூல்கள் விசேட கழிவு விலையில்

உயர் கல்வி மாணவர் களுக்கான அனைத்துவகை நூல்களும் விசேட விலைக்கழிவுடன்

ஆங்கில நாவல்கள் ஆங்கில இலக்கிய நூல்கள், ஆங்கில இலக்கண நூல்கள் சலுகை விலையில்

சிறுவர்களுக்கான கதைகள் மற்றும் பழைய நூல்கள் மிகக் குறைந்த விலையில்

மற்றும் ஏனைய ஸ்ரேசனரிப் பொருள்கள், பாடசாலை தர உள்ளீட்டுப்பொருட்கள், வைற்போட், கிறின்போட் over head Projector OHP Screen உட்பட அனைத்து வகையான கல்விசார் உபகரணங்களையும் ஒரேகூரையின் கீழ் உங்கள் விருப்பத்திற்கேற்ப நீங்களே தெரிவு செய்து பெற்றிட இன்றே நாடவேண்டிய ஒரேஇடம்.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, K.K.S.வீதி, யாழ்ப்பாணம். (C/680) T.P. :- 021 222 5542


# காசுக்கான வேலை அடுத்தமாதம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

துரித மீட்சித்திட்டத்தின்கீழ் காசுக்கான வேலைத்திட்டம் எதிர்வரும் மே மாதம் முதல் யாழ். மாவட்டத்தில் அமுல் படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கென பின்தங்கிய கிராமங்கள் தெரிவு செய்யப்படும் நடவடிக்கைகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுவருவதாக தெரியவருகின்றது.

இவற்றுள் இடம் பெயர்ந்த மக்கள் மீள் குடியமர்ந்த கிராமங்களையும் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நடவடிக்கைகள் பூர்த்தியடைந்ததும் அவை பாரம் பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பரிந்துரைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதனைத் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் இத்திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவுள்ளது எனவும் செயல்க வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் இவ்வேலைத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள கிராமங்களில் நடைபெறவுள்ள வேலைத்திட்டங்களை மேற்பார்வைசெய்யவெனவும் ஆளணியினரைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை ஒன்றும் அண்மையில் யாழ். செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

இத்திட்டத்தின் மூலமாக குறித்த கிராமத்தில் அபிவிருத்தி செய்யப்படவுள்ள பகுதிகள் தெரிவு செய்யப்பட்டு அவ்வூர் பொதுமக்கள் மூலமாக அவை அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதற்கு ஒவ்வொருவருக்கும் நாள் கூலி அடிப்படையில் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டத்தில் இதற்கென 23 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரியவந்தது. (பா)

# உன்னை வலுப்படுத்தினால் உலகம் வலுப்பெறும்

## கவிதைப்போட்டி முடிவுகள்

(கொக்குவில்)

கியூடெக் கரித்தாஸ் நிறுவனம் சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி கதை, கவிதைப் போட்டிகளை நடத்தியது. உன்னை வலுப்படுத்து உலகம் வலுப்பெறும் எனும் பொருளில் நடாத்திய போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது.

கவிதைப் போட்டி முடிவுகள் முதலாமிடம் திருமதி றொசந்தவநாயகம், (சிற்றம்பலபுரம், அச்சுவேலி), இரண்டாமிடம் மேரிகியூரி யோன் பீற்றர், (153/9 நாவலர் வீதி யாழ்ப்பாணம்), மூன்றாமிடம் டிஷானி கிறிஸ்தோப்பர் (27, மத்திய கிழக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம்). பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்

சுஜிதா, நாகரத்தினம், (தங்கோட்டை வீதி, வட்டுத்தெற்கு, வட்டுக்கோட்டை) 2கதிர்தர்சினி பரமேஸ்வரன்,(வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்) 3வி.எழிலரசி (தம்பசிட்டி பருத்தித்துறை) 4. ஜே.எஸ். ராஜ் (193/2, பிறவுண்றோட் யாழ்ப்பாணம்) மூ.ச.பொன்மாறன் (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி) 6. சுஜிதா துரைராஜன் (வைத்தியசாலை வீதி, சங்கானை) 7. சி.திருமகள் (39 நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை). 8 செல்வராசா மேனகா, (நரியீட்டான் மல்லாகம்.) 9 தசாந்தினி ஜெயராசா, (மாப்பாளர் வளவு, இமையாணன், உடுப்பிட்டி) 10 தனுஷ்ஷா பாலசுந்தரம் (1051 திருநகர் தெற்கு கிளிநொச்சி.)

சிறுகதைப்போட்டி முடிவுகள்.

முதலாமிடம் அ.விஷ்ணுவர்த்தினி(மலையந்தோட்டம், கரணவாய் வடமேற்கு வல்வெட்டித்துறை). இரண்டாமிடம் இயேசுராசா டொறற்றா, (பெரியவிளான், இளவாலை). மூன்றாமிடம் எஸ்.என்.ஜே. மரியாம்பிள்ளை, (645/1 கடற்கரை வீதி, குருநகர் யாழ்ப்பாணம்.)

பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்.

1 மிதுஷா மணிதரன் (யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, பருத்தித்துறை). 2 தசாந்தினி ஜெயராசா (மாப்பாளர் வளவு இமையாணன் உடுப்பிட்டி.) 3 றெக்ஸன் சுவர்ணா, (53 டேவிற் வீதி குருநகர் யாழ்ப்பாணம்.) (68)

உலகத்தில் நாம் எதையும் ஒரு பெயரை வைத்தோ, உருவத்தைக் கொடுத்தோ தான் நினைவில் வைத்துக் கொள்கிறோம். கடவுளை நினைத்து தியானம் செய்வதற்கும் இப்படி ஒரு வழிமுறை தேவைப்படுகிறது.

- ஸ்ரீரமணர் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## புதுவருடப் பிரார்த்தனை

தமிழ், சிங்கள மக்களால் பாரம்பரியமாகக் கொண்டாடப்படும் தமிழ், சிங்களப் புத்தாண்டு நாளைய தினம் பிறக்கின்றது.

இப்புத்தாண்டுத் தினத்தில் சிரசில் மருத்துநீர் தேய்த்து, நீராடி, புத்தாடை அணிந்து, ஆலய வழிபாடுகளுடன் சூரியனுக்குப் பொங்கல் படைத்து குதூகலிப்பது வழக்கம்.

மூன்று தசாப்தகாலமாக நாட்டில் நடைபெற்ற கொடூர யுத்தத்தின் கோரப் பிடியிலிருந்து மக்கள் விடுவிக்கப்பட்டபின், நாட்டில் படிப்படியாக ஏற்பட்டு வந்த சமாதான, அமைதிச் சூழலில் இரண்டாவது வருடமாக தமிழ், சிங்கள மக்களால் இப்புத்தாண்டு கொண்டாடப்படுகிறது.

கடந்த காலங்களில் சுமந்த அவலங்களையும், இழப்புக்களையும் மக்களால் மறக்க முடியாதிருந்தாலும், ஆயுதக் கலாசாரத்திற்கு முடிவு கட்டிய பின்னரும், மீண்டும் அந்த அவலங்களையும், இழப்புக்களையும் சந்திக்க வழிபிறக்கக் கூடாதென்றும், அதற்கு ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லையென்ற மனவைராக்கியதோடும் இம்முறை இறைவழிபாடுகளில் மக்கள் ஈடுபடுவர் என்பது திண்ணம்.

“கர” வருடம் எனப் பெயர் பெற்றுள்ள இப்புதுவருடம், குதிரை வாகனத்தில் பிறப்பதால், இராஜபீடை ஏற்பட வாய்ப்புள்ளது என்று சோதிடர்கள் தெரிவித்துள்ளனர்.

பதவி ஆசையும், இனவெறியும் பிடித்த ஒரு சில தமிழ்த் தலைமைகள் தங்கள் அரசியல் இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டு வருவதை மக்கள் நன்கறிந்து வைத்துள்ளனர்.

ஆனால், இந்த அரசியல் தலைமைகள் காணும் கனவுகளுக்கு மக்களின் புதுவருடப் பிரார்த்தனை, அவர்களது கனவை, கனவாகவே வைத்திருக்கச் செய்யும்.

இனவாதம், வகுப்புவாதம் பேசிய சிங்களத் தலைமைகள் தென்னிலங்கையிலுள்ள பெரும்பான்மை மக்களால் நிராகரிக்கப்பட்டு, ஓரங்கட்டப்பட்டுள்ள நிலையில், தமிழ்த் தலைமைகள் மீண்டும் இனத்துவேசத்தைக் கிளப்பி, அரசியல் இலாபம் தேட முயல்வதை அவதானிக்க முடிகிறது.

ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளுக்கு ஒப்பானது என்று கூறுவார்கள். அதேபோல் புதுவருடத்தினத்தன்று, தம் பிள்ளைகளையும, உடன் பிறப்புக்களையும், உடைமைகளையும், மற்றும் அவயவங்களையும் இழந்து ஏதிலிகளான மக்களின் அவல வாழ்வு மேலும் தொடராது, சுபீட்சமான எதிர்காலத்துக்கு வழி பிறக்க வேண்டும் எனக் கடவுளை வேண்டிக்கொள்வோம்.

தர்மத்தைக் காலால் மிதித்து, அரக்கத்தனமாகவும், அசுரத்தனமாகவும் நடந்தவர்களுக்குக் கிடைத்த படிப்பினைகளை வரலாறு கூறிச் சென்றுள்ளது.


மீண்டும் அந்த அரக்கத்தனத்திற்கும், அசுரத்தனத்திற்கும் வழி வகுப்பவர்களுக்கு அந்தப் படிப்பினைகள் நிச்சயம் கிடைக்கவே செய்யும்.

எனவே, கடந்த கால படிப்பினைகளைக் கருத்திற்கொண்டு எதிர்காலத்திலும் அவ்வாறு ஏற்படாதவாறு மக்கள் நடந்து கொள்வதற்கு வேண்டிய புத்திசாதுரியத்தையும், மனவைராக்கியத்தையும், சாந்தியையும், அமைதியையும் நாளை பிறக்கப்போகும் புதுவருடம் அளிக்க வேண்டுமென மக்களுடன் சேர்ந்து நாமும் இறைவனைப் பிரார்த்தனை செய்வோமாக...

- ஆசிரியர்.

# புனர்வாழ்வு பெற்றவர்களின் மறுவாழ்வில் அதிகாரிகள் அக்கறை செலுத்தவேண்டும்!

### சந்திரகுமார் எம். பி. அறிவுறுத்து



(கிளிநொச்சி)

தடுப்பிலிருந்து புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலையான முன்னாள் புலி உறுப்பினர்களின் மறுவாழ்வில் அதிகாரிகள் அக்கறையோடு செயற்படவேண்டும் என பா.உ குழுக்களின் பிரதிதலைவரான மு.சந்திரகுமார் அவர்கள் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:

தடுப்பிலிருந்து விடுதலையானவர்கள் அனைவருக்கும் அரசு பொது மன்னிப்பு வழங்கியே விடுதலை செய்துள்ளது. இவர்களுக்கு இன்று பாதுகாப்பு அமைச்சு, புனர்வாழ்வு அமைச்சு என்பன பல்வேறு உதவிகளைப் புரிந்து வருகிறது. குறிப்பாக இராணுவத்தினரும் முன்னாள் புலி உறுப்பினர்களுக்குப் பல வகைகளில் உதவிகளைப் புரிந்து வருகின்றனர். இந்த நிலையில் அதிகாரிகள், தொண்டு நிறுவனங்கள் என்பன சட்டங்களை மட்டும் காட்டி அவர்களை சமூகத்திலிருந்து ஒதுக்கி விடாதீர்கள். அவர்களை மீண்டும் சமூகத்தில் இணைத்து அமைதியான வளமான வாழ்வை ஏற்படுத்திக்கொடுக்க நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

கிராமங்களில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்ற வாழ்வாதார உதவிகளின் போது தடுப்பிலிருந்து விடுதலையான முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும் இதனை கிராம அலுவலர்கள் கட்டாயமாகக் கவனத்தில் எடுத்து கொள்ளவேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும் ஒரு காலத்தில் இவர்கள் யாருக்கு எதிராக ஆயுதம் ஏந்தினார்களோ அவர்களே பொது மன்னிப்பு வழங்கி உதவிகளை மேற்கொண்டு வருகின்ற போது, எமது பிரதேசத்தின் அதிகாரிகள் அவர்கள் தொடர்பில் தனியே சட்டங்களை மட்டும் காரணம் காட்டி அக்கறையின்றி இருப்பதனை ஏற்றுக்கொள்ளமுடியாது என்றும் தெரிவித்த அவர், அரசு பொது மன்னிப்பு வழங்கி முன்னாள் புலி உறுப்பினர்களை விடுதலை செய்துள்ளமை என்பது ஒரு சட்டரீதியான நடவடிக்கையே என்றும் குறிப்பிட்டார். (29)

## பண்டிகை காலத்தில் விபத்துக்கள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்

புதுவருட பண்டிகை காலத்தின்போது ஏற்படக்கூடிய விபத்துக்களை இயன்றளவு குறைக்கும்படி சுகாதார வட்டாரங்கள் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளன.

இது தொடர்பாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் விபத்துப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பிரசாத் ஆரியவம்ச தெரிவிக்கையில், மதுபோதையில் வாகனத்தைச் செலுத்துதல், கவனயீனமாகப் பட்டாசுகளை வெடித்தல் என்பனவே விபத்துக்கள் இடம்பெறுவதற்கு காரணம் எனக் குறிப்பிட்ட அவர், விசேடமாக நடைபெறுகின்ற விளை யாட்டுப் போட்டிகளின்போதும் வீட்டில் புத்தாண்டுக் கொண்டாட்டங் களின்போதும் எச்சரிக்கையாக நடந்துகொள்ளுமாறும் அவர் பொதுமக்களைக் கேட்டுள்ளார். கடந்த 2 வருட காலத்தில் பண்டிகை காலங்களில் ஏற்படும் விபத்துக்களின் எண்ணிக்கை 71 சதவீதமாக அதிகரித்துள்ளது. சென்ற வருட புத்தாண்டுப் பண்டிக்கைக் காலத்தின் போது 764 பேர் தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதாகவும், 287 பேர் வதிவிட சிகிச்சை பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதேவேளை, புதுவருட தினத்தன்று 24 மணி நேரமும் வைத்தியசாலை ஊழியர்கள் கடமையாற்றுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

## பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலய அலுவலகத்தில் இம்மாதம் 15ஆம் திகதி நடைபெறவிருந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர் தெரிவிற்கான நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

இந்நேர்முகப் பரீட்சை எதிர் வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளோர் குறித்த நேரத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (பா)

## டெங்கு நோயைக் கட்டுப்படுத்த ஒலிபெருக்கியில் அறிவித்தல்

(அச்சுவேலி)

டெங்கு நோய்த் தாக்கத்திலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் டெங்கு நோய்க் காவி நுளம்புகளை அழிப்பது தொடர்பாகவும், அதிலிருந்து பாதுகாப்புப் பெறுவது தொடர்பாகவும் அச்சுவேலி, ஆவரங்கால் மற்றும் புத்தூர் பகுதிகளில் பொதுச்சுகாதார பரிசோதகர்களின் அனுசரணையுடன் ஒலிபெருக்கிகள் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய வீடுகளில் நீர்தேங்கி நிற்கக்கூடிய இடங்களை இனங்கண்டு அழிக்குமாறும், குப்பை கூழங்களை உடனுக்குடன் அப்புறப்படுத்துமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டு வருவதுடன் வீடுகளிற்கு வருகைதரும் டெங்கு ஒழிப்புப் பிரிவினர்களுக்கு முழு ஆதரவினை வழங்குமாறும் ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. டெங்கை ஒழித்து சுகமான வாழ்வை வாழ்வோம் எனவும் ஒலிபெருக்கியில் தெரிவித்து வருகின்றனர். (03)

## கல்வாரித் திருவிழா

(கொக்குவில்)

யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் கல்வாரித் திருவிழா நாளை மறுநாள் ஆறாம்வெள்ளிக் கிழமை காலை 6.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுத்தலுடன் ஆரம்பமாகவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு திருச்சிலுவைப்பாதை, தியானம், திருப்பலி, ஆசந்தி என்பன இடம்பெறுமென பங்குத் தந்தை வண. பிதா றெஜி இராஜேஸ்வரன் அடிகளார் தெரிவித்தார்.

இதற்கான ஆயத்த வழிபாடுகள் நேற்று முதல் ஆரம்பமாகி, நாளை வரை நடைபெறும்.

இம்மாதம் 21ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு பெரிய வியாழன் திருப்பலி, பாதம் கழுவுதல் ஆகியனவும் 22ஆம் திகதி பெரிய வெள்ளி காலை 6.15 மணிக்கு சிலுவைப் பாதையும் மாலை 5.00 மணிக்கு திருச்சிலுவை வழிபாடும், 23ஆம் திகதி பெரிய சனி இரவு 11.15 மணிக்கு உயிர்ப்பு திருவிழிப்பு திருப்பலியும், 24ஆம் திகதி காலை 7.00 மணிக்கு உயிர்ப்பு ஞாயிறு பெருவிழா திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப் படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (68)

# இரணைமடுக்குள நீர் குடாநாட்டுக்குவர அரசாங்கம் அனுமதி வழங்கியது

இரணைமடுக் குளத்திலிருந்து யாழ். குடாநாட்டிற்குத் தண்ணீரைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளுக்கு அரசிடமிருந்து அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், பணிகள் முழுமையடைய குறைந்தது ஆறு வருடங்கள் செல்லுமென்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ள னர்.

யாழ். மாநகர சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே தேசிய நீர் வழங்கல், வடிகால் அமைப்புச் சபையின் சார்பில் பொறியியலாளர் பாரதிதாஸன் தலைமையிலான குழுவினரே மேற்கண்டவாறு சுட்டிக் காட்டியிருந்தனர்.

இதன்போது, தற்போது, நடைமுறையிலுள்ள கோண்டாவிலிலிருந்து யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிக்கான நீர் விநியோகத் திட்டத்திற்கு குறிப்பிட்ட இரு திணைக்களங்களும் இணைந்து செயற்பட வேண்டும் எனவும், நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்குப் பின்னர் இறுதி முடிவெடுக்கப்படுமெனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இச்சந்திப்பில் யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, யாழ். மாநகர ஆணையாளர் சரவணபவ உட்பட யாழ். மாநகர சபையினதும், ஏனைய துறைகளினதும் துறை சார்ந்த உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

# நிரந்தர பயிற்றுநருடன் மைதானம் நவீன மயப்படுத்தப்பட வேண்டும்

## அதிபர் சிவானந்தராசா கோரிக்கை

(யாழ்.நிருபர்)

பிரதேச செயலாளர் பிரிவு கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் சுதேசிய விளையாட்டுக்களும் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் குட்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய கலாநிதி அ.தியாகராசா மத்திய மகாவித்தியாலய அதிபர் பொ.சிவானந்தராஜா குறிப்பிட்டார்.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்தியமகாவித்தியாலய மைதானத்தில் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி. ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில்:

கப்டன் தர்மரட்ணம் போன்ற சிறந்த தேசிய விளையாட்டு வீராகளை உருவாக்கிய காரைநகர்ப் பிரதேசம் இன்று விளையாட்டுத துறையில் பின்னடைந்திருப்பது கவலையளிப்பதாக உள்ளது.


இரத்தினகோபால், இராஜகோபால், ஆனந்த சற்குணநாதன், ஆனந்தகுமார், கோவிந்தன் போன்றவர்கள் இந்த மைதானத்தில் உருவாகி சர்வதேச நாடுகளில் விளையாட்டுக்குப் புகழ் சேர்த்துள்ளனர்.

காரைவிளையாட்டுக்கழகம், கோவளம் இளைஞர் விளையாட்டுக் கழகம், தோப்புக்காடு விளையாட்டுக் கழகம், சோலையான் விளையாட்டுக் கழகம் என்பன கடந்த காலங்களில் காரைநகரில் புகழ்பெற்ற விளையாட்டு வீரர்களை உருவாக்கியிருந்தது. இன்று பின்தங்கியுள்ள விளையாட்டுத்துறையை முன்னேற்றுவதற்குச் சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

காரைநகரில் உள்ள இந்த மைதானம் 400 மீற்றர் மைதானமாக, நவீன வசதிகளைக் கொண்ட மைதானமாகத் தரம் உயர்த்தப்படுவதுடன் விளையாட்டுத் துறைக்கு நிரந்தர பயிற்றுநர் நியமிக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் தனது தலைமையுரையில், சகல வளங்களையும் கொண்ட காரைநகர் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் சிறந்த விருந்தோம்பல் பண்பு மிக்கவர்கள். அண்மைக் காலமாக விளையாட்டுத்துறையில் இவர்கள் காட்டி வரும் ஆர்வம் பாராட்டுக்குரியது.

சிறப்பு விருந்தினராக வருகை தந்த தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் உரையாற்றும்போது, காரைநகர் மக்கள் கல்வியிலும் வர்த்தகத்துறையிலும் முன்னேறியதைப் போன்று, விளையாட்டுத் துறையிலும் வளர்ச்சி பெற வேண்டும். தேவையான உதவிகளையும் உப கரணங்களையும் வழங்குவதற்கு நாம் தயாராக உள்ளோம். அவற்றைப் பயன்படுத்தி இங்கு வசிக்கும் மக்கள் விளையாட்டுத் துறையில் முன்னேற வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். (10)



திருநெல்வேலி பாரதி முன்பள்ளியும், கம்பன் முன்பள்ளியும் இணைந்து நடாத்திய விளையாட்டு விழாவில் ஈ.பி.டி.பி யின் நல்லூர் அமைப்பாளர்அ.ரவீந்திரதாசன் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படத்தில் காணலாம் (மி)

# வயோதிபர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சட்டநாதர் சிவன் கோயிலில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் வயோதிபர் ஒருவர் காயமடைந்துள்ள நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் மோதிக் கொண்ட இவ் விபத்தில் சைக்கிளில் பயணஞ் செய்த நல்லூரைச் சேர்ந்த க.சின்னத்தம்பி (வயது 76) என்ற முதியவரே காயமடைந்தவராவார். (மி)

# காவல் அரண்கள் அகல்கின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ். பண்ணை வீதியில், மண்டைதீவுச் சந்திவரைக்குமான பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கடற்படையினரதும், இராணுவத் தினரதும் ஒரு சில காபபரண்களைத் தவிர ஏனைய காப்பரண்கள் அங்கிருந்து படையினரால் அகற்றப்பட்டு வருகின்றன. யாழ். பண்ணை வீதியில், சிறுத் தீவுக்கு மேற்காக அமைந் திருந்த கடற்படையினரது காவ லரண் ஒன்றும், பண்ணைச் சந்தி யில் அமைந்திரந்த காவலரண் தொகுதி ஒன்றும் இவ்வாறு படையினரால் அகற்றப்பட்டுள்ளன. (பா)

# க.பொ.த.(சா/த) பெறுபேறுகள்

யாழ்.கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம

தே.கேதினி - 6ஏ.2பி.சி,
அ.கசலினி - 3ஏ.3பி.3சி,
அ.தசிலினி - 2ஏ. பி. 4சி,2எஸ்
அ.அனுசூயா - 2ஏ. பி. 3சி.2எஸ்,
சு.மகிந்தன் - ஏ.3பி.4சி,
பா.கஜந்தரூபி - ஏ.3பி.3சி.2எஸ்,
சு.சுதர்னிகா - ஏ.2பி.2சி.2எஸ்,
அ.நிருஜா - ஏ.பி.3சி.2எஸ்,
பு.கபிராஜ் -ஏ.பி.5சி.2எஸ்,
பு.கஜலக்சி - ஏ.பி. 3சி.3எஸ்,
இ.தனுசன் - ஏ.பி.2சி.4எஸ் (10)

❄ ❄ ❄

யாழ்.நல்லூர் மங்கையர்க் கரசி வித்தியாலயம்.

பசுபதி லோசனா - 2ஏ.2பி.4சி, சௌந்தரராஜன் திலக்சன் - 2ஏ.பி2சி3எஸ், மகேந்திரன் வினோதினி 2ஏ.பி.4சி.எஸ், வன்னியசிங்கம் தனுஷா 2ஏ.4சி.3எஸ், ஜெயபாஸ்கரன் பிரசாந் - ஏ.2பி.4சி.எஸ், யோகராஜா லிசாந்தி ஏ.2பி.3சி.2எஸ், அங்கமுத்து மதுரிக்கா - ஏ.பி.5சி.எஸ், இராசநாதன் டுவாரகா ஏ.பி.4சி.3எஸ்

# ஐந்து மில்லியன் பனைமரத்தில் இருந்து வருடத்தில் 500 கோடி வருமானம் பெறலாம்

## ப.அ.ச. தலைவர்

(வவுனியா நிருபர்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பதினொரு மில்லியன் பனை மரங்களில் ஐந்து மில்லியன்மரங்களிலிருந்து நாம் பயனைப் பெறுவோமானால் ஒரு வருடத்தில் 500 கோடி ரூபாவினை வருமானமாகப் பெறலாம் என பனை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை வவுனியாவில் நடைபெற்ற பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத் தலைமைக் காரியாலயக் கட்டடத் திறப்பு விழாவில் உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

ஒரு பனை மரம் 20 வருடத்திலிருந்து 100 வருடம் வரை பலனைத் தரும். வேர் முதல் உச்சிவரையில் பலனை தரக்கூடியது. 800 வகையிலான பொருட்களைப் பனம் பொருட்களிலிருந்து செய்யலாம். ஆனால் நாம் குறைந்த பயனையே பெறுகின்றோம்.

இதேவேளை பனை மற்றும் தென்னை மரங்களில் ஏறுவதற்குரிய இயந்திரங்களை நாம் இந்தியாவிலிருந்து வரவழைத்துள்ளோம். அவற்றை அனைதுக கூட்டுறவுத் தொழிலாளர்களுக்கும் வழங்கவுள்ளோம். வடக்கு, கிழக்கில் தேசிய பொருளாதார முன்னேற்றத்தில், பனை தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்கள் முக்கியத்துவம் பெறுகின்றது எனவும் அவா மேலும் தெரிவித்தார். (39)

# வலிகாமம் வடக்கு தெற்கு பிரதேச மக்கள் பிரதிநிதிகளை அமைச்சர் டக்ளஸ் சந்தித்து கலந்துரையாடினார்

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வலிகாமம் வடக்கு, தெற்குப் பிரதேச மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

சுன்னாகம் ஐயனார் மண்டபத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக அமைச்சர் எடுத்து விளக்கினார்.

குறிப்பாக எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ள அரசியல் பணிகள் குறித்தும், அதற்கு மககள் ஆற்ற வேண்டிய பங்கு, பணிகள் குறித்தும் அங்கு ஆராயப்பட்டதுடன் மக்களின் கேள்விகளுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விரிவான விளக்கத்தையும் வழங்கினார்.

திரு.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) ஈ.பி.டி.பி.யின் வலிகாமம் பிரதேச இணைப்பாளர் எஸ்.பாலகிருஷ்ணன் ஜீவன், ஈ.பி.டி.பி.யின் வலி வடக்கு தெற்கு பிரதேச அமைப்பாளர் அன்பு உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# புதுவருட சிறப்பு வழிபாடுகள்

(அச்சுவேலி)

அச்சுவேலி, நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோயில் சித்திரைப் புத்தாண்டு உற்சவம் நாளை வியாழக் கிழமை காலை 5.00 மணிக்கு விசேட ஆராதனை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி இடம் பெறவுள்ளது.

அதிகாலைப் பூசைவழிபாட்டினைத் தொடர்ந்து முருகப் பெருமான் உள்வீதி வலம் வந்து அடியார்க்கு அருள் பாலித்ததைத் தொடர்ந்து, காலை 10.00 மணிக்கு 1008 சதுஸ்ர சங்காபிஷேக நிகழ்வு இடம்பெற்று அதன்பின்னர் மதியம் 12.00 மணிக்கு பூசை வழிபாடுகள் இடம்பெறும். (03)

❄ ❄ ❄

(அச்சுவேலி)

அச்சுவேலி உலவிக்குளம் சித்திவிநாயகர் ஆலயத்தில் சித்திரைப் புதுவருட சிறப்பு ஆராதனை வழிபாடுகள் நாளை காலை 6.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.


ஆலயப் பிரதம குருவாகிய விருத்தகிரீஸ்வர குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வழிபாடுகளில் விநாயகப் பெருமானுக்கு விசேட அர்ச்சனை வழிபாடுகளும் இடம் பெற்று பெருமான் அடியார்களுக்கு அருள்பாலிப்பா. (03)



10.04.2011ல் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிய பேருந்தில் வெளியீடு செய்யப்பட்ட கவிஞர் நெடுந்தீவு - முகிலனின் எட்டாவது கவிதைத் தொகுதியான "பயணிகள் கவனத்திற்கு" வெளியீட்டின் சில பதிவுகள்...

# கிராமப்புற மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடமாடும் வங்கிச் சேவை

## மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் பத்மநாதன் தெரிவிப்பு




(யாழ்ப்பாணம்)

வங்கிக்கிளைகள் இல்லாத கிராமப்புறங்களுக்குச் சென்று நவீன முறையில் தரமான வங்கிச் சேவையை மக்களுக்கு விழங்குவதே மக்கள் வங்கியின் இலக்கு என வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் தெரிவித்தார்.

மக்கள் வங்கி யாழ். பிராந்தியத்திற்கு அண்மையில் கிடைத்துள்ள நடமாடும் வங்கிச் சேவை வாகனம் தொடர்பாக விளக்கமளிக்கும் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - தானியக்க பணம் பெறும் ATM இயந்திரம், நேரடி வங்கி (Online) சேவை போன்ற நவீன வசதிகளைக் கொண்ட நடமாடும் வாகனமாக இது அமைந்துள்ளது. இதன் மூலம் தற்போது மீளக்குடியமர்வு நடைபெறும் பிரதேசங்கள் மற்றும் கிராமப் புறங்களில் உள்ளவர்களுக்குத் சேவையை வழங்கமுடியும். இதன்மூலம் வாடிக்கையாளர்களின் போக்குவரத்துப் பிரச்சினை தீர்க்கப்படும். அதனால் வங்கிக்கும் மக்களுக்கும் இடையேயான தொடர்புகள் மேலும் வலுவடையும். மக்கள் வங்கி 50 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு வாடிக்கையாளர்களுடன் இணைந்து புதுவருடப் பிறப்பை மிகச் சிறப்பாகக் கொண்டாடவுள்ளது.

புதுவருடத்தன்று காலை 9 மணி முதல் சுபநேர கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறும். அன்றையதினம் கொடுக்கல் வாங்கல் செய்யும் அனைவருக்கும் கைவிசேடம் வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.(கா)

# விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் வரி மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் முதற்கட்ட ஆதன வரி மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த மதிப்பீட்டுப் பணிகளில் 15 உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர். வலி.தெற்கு சுன்னாகம் பிரதேச சபையின் உடுவில் உப அலுவலகம், ஏழாலை உபஅலுவலகம், யாழ். மாநகர சபை உட்பட்ட பிரதேசம் ஆகியவற்றின் மதிப்பீட்டுப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் பணி இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. இந்தப் பிரதேசத்தின் பணிகள் நிறைவு பெற்றதும் எதிர்வரும் மாதம் நல்லூர் பிரதேச சபைக் குட்பட்ட நல்லூர் உப அலுவலகம், கொக்குவில் உப அலுவலகம் ஆகிய பிரிவுகளுக்குட்பட்ட பிரதேசத்தில் மதிப்பீட்டுப் பணிகள் நடைபெறும் எனவும், இந்தப் பணிக்குக் குறித்த பிர தேசங்களில் வசிப்பவர்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுள்ளனர். (கா)

# தலைக்கவசம் அணியுமாறு பொலிஸார் அறிவுறுத்தல்

(அச்சுவேலி)

49 சீ.சீ மோட்டார் சைக்கிள் உட்பட சிறிய ரக மோட்டார் சைக்கிள்களில் பயணம் செய்பவர்களும் கட்டாயம் தலைக் கவசம் அணியவேண்டும் என பொலிஸார் பயணிகளுக்கு அறிவுறுத்தலகளை வழங்கி வருகினறனர்.

இதுவரை காலமும் இவ்வாறான மோட்டார் சைக்கிள்களில் தலைக்கவசம் அணிய வேண்டியது அவசியமில்லை என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இனிவரும் காலங்களில் தலைக்சவசம் அணிய வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரியப்படுத்தி வரும் பொலிஸார், இதனை மீறிச செயற்படுபவர்கள் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் எச்சரிக்கை செய்து வருகின்றனர்.

பொதுமக்கள் அறிவுறுத்தல்களை உதாசீனம் செய்வதனாலேயே விபத்துக் களில் வீண் உயிரிழப்புகள் ஏற்படுவதாகவும் பொலிஸார் சுட்டிக் காட்டுகின்றனர். (03)

# ஏ-9 வீதி திருத்தப்படுகிறது

(கிளிநொச்சி)

ஏ-9 வீதியின் திருத்தப்பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றது. வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரையுமுள்ள சுமார் 25 மதகுகளின் திருத்தப்பணிகள் நடைபெறுவதுடன், குன்றும் குழியுமாக இருந்த பகுதிகள் துரிதமாகத் திருத்தப்பட்டு வருகின்றது. இதுதவிர தாண்டிக்குளத்திலிருந்து கனகராயன்குளம் வரையான வீதிகள் அகலமாக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக விபத்துக்களும் குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (02)

# கர வருட வரவு - செலவு விபரம்

| | வரவு | செலவு |
|---|---|---|
| மேடம், விருச்சிகம் | 5 | 11 |
| இடபம், துலாம் | 14 | 2 |
| மிதுனம், கன்னி | 2 | 2 |
| கடகம் | 2 | 8 |
| சிங்கம் | 14 | 8 |
| தனுசு, மீனம் | 8 | 2 |
| மகரம், கும்பம் | 11 | 11 |

வாக்கிய பஞ்சாங்கம்

# பிறக்கப்போகும் கர புத்தாண்டுக் கருமங்கள்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம் பொருளான சிவபெருமானுடைய கிருபாகடாட்சத்தினால் வரும் சித்திரை மாதம் முதலாம் நாள் 14.04.2011 வியாழக்கிழமை முற்பகல் சரியாக 11 மணி 33 நிமிடத்தில் ஏகாதசித் திதியில் மக நட்சத்திரத்தின் மூன்றாம் பாதத்தில் மிதுன லக்கினத்தில் புதன் சூக்குமவோரையில் சாத்வீக குணவேளையில் ஆந்தை நடைத்தொழிலும் சூக்குமபஷி உண்டித்தொழிலும் செய்யுங் காலத்தில் இப்புத்தாண்டு கர என்ற நாமத்துடனே பிறக்கின்றது.

அன்றைய தினம் காலை 7.33 மணிமுதல் பிற்பகல் 3.33 மணிவரை விஷ புண்ணிய காலமாகும். புத்தாண்டு தினத்திலே மருத்து நீர் தேய்த்துத் தலையிலே கடப்பமிலையும், காலிலே கொன்றையிலையும் வைத்து நீராடி, பொன்னிறமான பட்டு ஆடை பச்சைக்கரையுடனே உடுத்து பெற்றோரை வணங்கிக் குருவையும் வணங்கி ஆலய தரிசனஞ் செய்து கொள்ளுதல் நல்லது.

பின்பு சூரியனுக்குப் பொங்கிப் படைத்து குலதெய்வ வழிபாடியற்றி உற்றார், உறவினர், நண்பர்களுடன் உரையாடி உறவு கொண்டாடி மகிழ்தல் நல்லது. தாம்பூலம், வாழைப்பழம் முதலியன படைத்து, 'ஆண்டவா! இது வரை காலமும் நாங்கள் பட்ட படுந்துயர் போதுமையா! இனியாவது சந்தோஷம் மேலிட எல்லோரும் ஒற்றுமையாக வாழவேண்டும்' என்று பிரார்த்தித்துக் கொண்டு அன்றாடக் கருமங்களைத் தொடங்கலாம்.

***கைவிஷேசம் வழங்குதல்***

புத்தாண்டு தினத்தில் பகல் 11.37 - 12.02, 12.14 - 1.27, மாலை 4.22 - 6.07, 6.42 - 7.30 மணி வரைக்கும்.

புத்தாண்டுக்கு அடுத்தநாள் வெள்ளிக்கிழமை காலை 8.00 - 9.45, 10.00 -10.30வரை. நண்பகல் 12.15 - 2.00, 6.50 - 8.00 வரைக்கும்.

***தோஷமுள்ள நட்சத்திரங்களின் விபரம்***

அச்சுவினி, மகம், பூரம், உத்தரம், மூலம், உத்தராடம், திருவோணம், அவிட்டம் ஆகியன உள்ளவர்கள் மருத்துநீர் தேய்த்து நீராடி இயன்ற தான தர்மங்கள் செய்து இறைவழிபாடியற்றுதல் வேண்டும்.

***பொதுப்பலன்***

இந்த கர புத்தாண்டு ஒரு நல்ல புனிதமான மங்களம் நிறைந்த சுபிட்ச ஆண்டாகும். எல்லா மக்களுக்கும் மகிழ்ச்சியுடனே நிறைவான வாழ்க்கை மலரும் ஆண்டாகும். பொதுவாக கலைஞர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் சிறப்பைத் தரும் ஆண்டாகும். வாக்கிய பஞ்சாங்கப்படி

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 14 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 1 மணிக்கு கர என்னும் பெயருடைய தமிழ்ப் புதுவருடம் உதயமாகிறது. இது 60 வருட சுற்றுவட்டத்தில் 25 ஆவது வருடமாகும். அன்று காலை 9 மணி முதல் 5 மணிவரை மேட சங்கிரமான புண்ணியகாலமாகும். இப்புண்ணிய காலத்தில் சகலரும் மருத்துநீர் வைத்து ஸ்நானம் செய்து தலையில் கொன்றை இலையும், காலில் புங்கமிலையும் வைத்து ஸ்நானம் செய்து மஞ்சள் நிறப் பட்டாயினும் அல்லது மஞ்சள் கரைவைத்த வெள்ளைப்புது வஸ்திரமாயினும் தரித்து மங்களப் பொருட்களைத் தரிசித்து, மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற ஒழுங்கில் வழிபாடுகளை மேற்கொண்டு புத்தாண்டை மகிழ்வுடன் வரவேற்போம்.

புதுவருட தோஷ நட்சத்திரங்களாக அஸ்வினி, மகம், பூரம், உத்தரம் 1ம் கால், மூலம், உத்தராட்டம் 2, 3, 4 ஆம் கால்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் கால்கள் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் அவசியம் மருத்துநீர் வைத்து ஸ்நானம் செய்து வழிபட்டு தானதரும் செய்தல் வேண்டும்.

- திருக்கணித பஞ்சாங்கப்படி



கலைத்தூது கலையகத்தில் நடைபெற்ற ஆயர் கலாநிதி வண ஏ.ஜே கொலின்ஸின் இறைபணி சேவையைப் பாராட்டும் விழாவில் ஆயருடன், அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா உரையாடுவதையும் காணலாம்.

# ஆதினியின் இன்றைய பலன்

(13.04.2011 – புதன்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி பங்குனி 30

இராகுகாலம்12.06 –1.36, சுபநேரம் 04.36 –6.06, தசமி மு.இ 8.35, ஆயிலியம் மு.இ 9.43, சித்தம், தமிழ் – சிங்கள வருடப்பிறப்பு முன்தினம், யோகர் சுவாமிகள் குருபூசை.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:**– காரியத்தடை, பணக் கஷ்டம், நோய்.

**ரிஷபம்:**– முயற்சி பலியாமை, விரோத மனப்பான்மை, முற்கோபம்.

**மிதுனம் :**– பெரும் அலைச்சல், பொருள் இழப்பு, அகால போசனம்.

**கடகம்:**– ஏமாற்றப்படல், தொழிலால் நட்டம், விதண்டாவாதம்.

**சிம்மம்:**– நண்பர் ஆதரவு, தனவரவு, குதூகலம்.

**கன்னி :**– பரிசு கிடைத்தல், வழககில் வெற்றி, இனசனக் கொணடாட்டம்.

**துலாம் :**– நித்திரையில் விருப்பம், முயற்சி தடை, பணச் செலவு.

**விருச்சிகம்:**– பகைவரால் உபத்திரவம், பணமுடை, தவறான முடிவு.

**தனுசு:**– காரிய சித்தி, தெய்வ நம்பிக்கை, விருந்தினர் வருகை.

**மகரம்:**– தெய்வ வழிபாடு, ஆடை ஆபரணச் சேர்க்கை, தானதர்ம விருப்பு.

**கும்பம் :**– நல்லோர் சேர்க்கை, தொழிலில் லாபம், மதிப்புயர்வு.

**மீனம்:**– களியாட்ட விருப்பு, பிள்ளைகளால் உதவி, பயணம்.

# புலிகளின் உறுப்பினர்கள் சரணடைவை 18 மணிநேரத்திற்கு முன் அறிந்த ஐ.நா

(கொழும்பு)

**வன்னி இறுதிக்கட்ட யுத்தத்தின் போது புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் உட்பட புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் சரணடைவது குறித்த தகவல்கள் 18 மணிநேரத்திற்கு முன் னரே ஐ.நா அறிந்திருந்ததாக ஐக்கிய நாடுகள் சபையில் பணியாற்றிய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.**

புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் பா.நடேசன் உட்பட முக்கிய உறுப்பினர்கள் சரணடை வது குறித்த தகவல்கள் 18 மணிநேரத் திற்கு முன்னரே ஐ.நாவுக்கு தெரியும்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது சரணடைபவர்களின் விபரங்களும் ஐ.நாவுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஐக்கிய நாடுகள் சபை சார்பாக அவர்களை வரவேற்பதற்கு கொழும்பில் பணியாற்றிய ஐ.நா அதிகாரிகள் வவுனியாவுக்குச் செல்லவும் திட்டமிட்டிருந்தனர்.

அப்போது கொழும்பில் பணியாற்றிய ஐ.நா அதிகாரிகளில் பலர் தற்போது பணியில் இருந்து விலகியுள்ளதுடன் மற்றும் இலங்கையை விட்டும் வெளியேறியுள்ளனர்.

சரணடைவது தொடர்பான மாயைகளை உருவாக்கி புலிகளை படுகொலை செய்யவே கொழும்பும், கொழும்புக்கு ஆதரவான ஐ.நா அதிகாரிகளும் முயற்சிகளை மேற்கொண்டதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இதேநேரம் ஐ.நா செயலாளர் நாயகம் பாண் கீ மூனின் பிரதம அதிகாரி விஜய் நம்பியாரும் கொழும்பில் தங்கியிருந்துள்ளார். இரு ஐ.நா அதிகாரிகளே ஓமந்தையில் உள்ள சோதனைச் சாவடிக்கு இரகசியமாக அனுப்பப்பட்டிருந்தனர். ஏனைய அதிகாரிகள் தாண்டிக்குளத்தைக் கடக்கக் கூட அனுமதிக்கப்படவில்லை.

இது தொடர்பில் அனைத்துலக விசாரணைகளின்போது சாட்சியமளிக்கதான் தயாராக உள்ளதாக ஐ.நா சபையில் பணியாற்றிய அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## மகாவம்சத்தின் ஆறாவது அத்தியாயம் தொகுக்கும் வேலைகள் ஆரம்பம்

(கொழும்பு)

1978ஆம் ஆண்டிலிருந்து 2010 வரை இலங்கையின் வரலாற்றைக் குறிப்பிடும் மகாவம்சத்தின் 6ஆவது அத்தியாயத்தை தொகுக்கும் வேலை அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது. இது 2012இல் வெளியிடப்படும் என கலாசார மற்றும் கலைகள் அமைச்சு நேற்றுத் தெரிவித்தது.

பேராசிரியர் விமல் ஜி.கலகல்ல தலைமையிலான எழுத்தாளர் சபை தகவல்களை சேகரித்து பிரதியைத் தயாரித்து வருகின்றனர். சகல அரசியல்,கல்விசார்,கலாசார,சமய, சமூக மாற்றங்களும் இதில் சேர்க்கப்படும் என அமைச்சின் செயலாளர் விமல் ருபசிங்க தெரிவித்தார்.

கி.மு.534இல் விஜயனின் வருகையிலிருந்து ஆரம்பிக்கப்படும் மகாவம்சம் உலகின் மிக நீண்ட அதாவது 2,000 ஆண்டு கால தொடர்ச்சியான வரலாற்றைப் பதிவு செய்த வரலாற்று நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

## துட்டகைமுனுவாக மேர்வின் சில்வா



(கொழும்பு)

எல்லாளனை வென்று இலங்கையை ஒரு குடைக் கீழ் ஆட்சி செய்த அரசன் துட்டகைமுனுவின் வேடத்தில் சிங்கள திரைப் படம் ஒன்றில் நடிக்கின்றார் பொதுமக்கள் தொடர்பாடல் அமைச்சர் மேர்வின் சில்வா.

இத்திரைப் படத்தின் பெயர் Surangana Lovin Avilla (Coming from the Fairyland ). துட்டகைமுனுவின் மறு உருவம் என்று சுயமாக சொல்லித் திரிபவர் மேர்வின்.

இந்நிலையில் இவர் துட்டகைமுனுவின் வேடத்தில் நடிக்கின்றமை சிங்கள மக்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை இத்திரைப்படம் ஏற்படுத்தி இருக்கின்றது.

# மேலதிக பஸ்சேவை நடத்திய போதிலும் பயணிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது

## போக்குவரத்து அதிகாரசபை கவலை

(கொழும்பு)

தமிழ்,சிங்கள புதுவருட கால விடுமுறையையொட்டி 300 மேலதிக பஸ் சேவைகள் நடத்தப்பட்ட போதிலும் பயணிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாக இலங்கை போக்குவரத்து அதிகார சபை இன்று தெரிவித்துள்ளது.

கொழும்பு மத்திய பஸ் நிலையத்தில் பயணிகள் வரிசையில் இதுவரை அதிக கூட்டமில்லை. வழக்கமாக பஸ்களின் எண்ணிக்கை குறித்து மக்கள் கவலை கொள்வர். ஆனால், இம்முறை பஸ்களைவிட பயணிகளின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது என இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் எம்.டி. பந்துசேன தெரிவித்தார். இரவு 8 மணிக்குப் பின்னர் பஸ்கள் வெறிச்சோடுகின்றன என அவர் கூறினார்.

எனினும் பயணிகளின் எண்ணிக்கை நாளையும் நாளை மறுதினமும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் கூறினார்.

இதுவரை பதுளை, ஹட்டன், நுவரெலியா ஆகிய பகுதிகளுக்கான பஸ்களிலேயே பயணிகளின் எண்ணிக்கை அதிகமாக காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

எனினும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன கூறுகையில், தனியார் பஸ் உரிமையாளர்களால் வழங்கப்பட்ட பஸ்கள், பயணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமானதாக இல்லை எனத் தெரிவித்தார்.

"விடுமுறை காலத்தில் பஸ்கள் அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால் பற்றாக்குறை உள்ளது" என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த சில தினங்களில் போதிய எண்ணிக்கையில் பயணிகள் இல்லாததால் சில ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டதாக ரயில்வே திட்டமிடல் இயக்குநர் விஜய சமரசிங்க தெரிவித்தார். எனினும் ஏப்ரல் 8 முதல் 12 ஆம் திகதி வரையிலான காலத்தில் அதிகரிக்கப்பட்ட ரயில் சேவைகள் திட்டமிட்டபடி நீடித்திருக்கும் என அவர் கூறினார்.

# ஐ.நா நிபுணர் குழு அறிக்கையை பகிரங்கமாக வெளியிடக் கூடாது

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

நிபுணர்கள் குழுவின் அறிக்கை வெளியிடப்பட உள்ள நிலையில், நிபுணர்கள் குழு அறிக்கையை பகிரங்கமாக வெளியிடுவது தார்மீகமான நடவடிக்கை அல்ல என இலங்கை அரசாங்கம் கூறியுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின் போது, மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து, தனக்கு ஆலோசனை வழங்க, ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான்-கீ-மூன் நியமித்த நிபுணர்கள் குழு தனது இறுதி அறிக்கையை வெளியிட உள்ளது.

நிபுணர்கள் குழுவின் அறிக்கை முதலில் ஐ.நா செயலாளரிடம் கையளிக்கப்பட உள்ளதாகவும், கையளிக்கப்பட்ட பின்னர், அதனை பகிரங்கப்படுத்துவதா இல்லையா என்பது பற்றி தீர்மானிக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

நிபுணர்கள் குழு, கடந்த வருடம் மே மாதம் நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவில், இந்தோனேசியாவைச் சேர்ந்த மர்சுகி தருஸ்மன், தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த யஸ்மின் சூகா, அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்டீவன் ரட்னர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இதேவேளை, நிபுணர்கள் குழு அறிக்கையை பகிரங்கமாக வெளியிடுவது தார்மீகமான நடவடிக்கை அல்ல என இலங்கை அரசாங்கம் கூறியுள்ளது.

தனக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை ஐ.நா செயலாளர் வெளியிடக் கூடாது என்பதே இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு என அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் இயங்கும் கப்பக் கும்பல்களுடன் அரசியல்வாதிகளுக்கு நேரடித்தொடர்பு

## பாதுகாப்புச் செயலர் குற்றச்சாட்டு

(கொழும்பு)



கப்பம் கோரும் கும்பல்களை கைது செய்வதற்காக விசேட தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட உள்ளதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நாடு முழுவதிலும் இவ்வாறான கப்பம் கோரும் கும்பல்கள் இயங்கி வருவதாகவும், குறித்த கப்பக் கும்பல்களை இல்லாதொழிப்பதற்காக பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் கூட்டாக இணைந்து நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். பிரதான நகரங்களின் மரக்கறி, மீன் சந்தைகள் மற்றும் பஸ் நிலையங்களில் இவ்வாறு கப்பம் கோரும் கும்பல்கள் இயங்கிவருவதாகத் தெரிவித்துள்ள அவர். கொழும்பில் கடைகள் மற்றும் சந்தைகள் காணப்படும் வீதிகளில் கப்பக் கும்பல்கள் இயங்கிவருவதாக தகவல்கள் கிட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மரக்கறி வகைகளை கூடிய விலைக்கு விற்பனை செய்யுமாறு உத்தரவிட்டு அதன் மூலம் ஈட்டும் லாபத்தை தமக்கு வழங்குமாறு கப்பக் கும்பல்கள் கோரி நிற்பதாக விசாரணை களின் மூலம் தெரிய வந்துள்ளதென அவர் கூறியுள்ளார். நாட்டில் இயங்கி வரும் கப்பக் கும்பல்களினால் நுகர்வோர் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக குறிப்பிட்டுள்ள கோத்தபாய, கப்பக் கும்பல்களுடன் பிரபல அரசியல்வாதிகளுக்கு நேரடித் தொடர்பு காணப்படுவதாகவும் மேலும் தெரிவித்தார்.


# இந்திய கடற்படையினர் கைதுசெய்த எட்டு இலங்கை மீனவர்களும் விடுவிப்பு

(கொழும்பு)


எட்டு இலங்கை மீனவர்கள் ஐந்து படகுகளுடன் இந்திய கரையோர பாதுகாப்பு கடற்படையினரால் இலங்கைக் கடற்படையினரிடம் கையளிக்கப்பட்டனர்.

காங்கேசன்துறையிலிருந்து 15 கடல் மைல் தொலைவிலுள்ள சர்வதேச கடற்பரப்பில் வைத்து மீனவர்களையும், படகுகளையும் நேற்றுமுன்தினம் காலை 10.00 மணியளவில் இலங்கை கடற்படையினர் பொறுப்பேற்றுள்ளதாக கடற்படையின் பேச்சாளர் கொமாண்டர் கோசல பிரசன்ன வர்ண குலசூரிய தெரிவித்தார். சர்வதேச கடற்பரப்பில் வைத்து பொறுப்பேற்றுக்கொண்ட மீனவர்களையும் படகுகளையும் காங்கேசன் துறையில் வைத்து கடற்றொழில் அமைச்சின் அதிகாரிகள் குடிவரவு குடியகல்வு திணைக்கள பிரதிநிதிகள் முன்னிலையில் நேற்றுமுன்தினம் ஒப்படைத்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

# பாடசாலை அணிகளுக்கிடையிலான இறுதி ருவெனி்ரி 20 போட்டி இன்று!



சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி



வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி அணி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலை அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட ரி-20 போட்டியின் இறுதிப் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்பட்ட வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் வெற்றிக் கிண்ணத்திற்கான இறுதிப் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இதன் இறுதிப் போட்டியில் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியும், வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

பொன்களின் போர் கிரிக்கெட் தொடரில் மோதும் இரு அணிகளும் இறுதிப் போட்டிக்கு முன்னேறியமையானது அதன் ஆதரவாளர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ள அதேவேளை, மிகுந்த பரபரப்பும் அவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. எனவே, இப்போட்டி த்ரில் நிறைந்ததாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, மூன்றாமிடத்திற்கான போட்டி இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணியும், கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதவுள்ளன. (20)

## கிளிஸ்டர்ஸ் சந்தேகம்




(புருசெல்ஸ்)

பிரெஞ் ஓப்பன் ரென்னிஸ்போட்டித் தொடரில் கிளிஸ்டர்ஸ் ஆடுவது சந்தேகம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது: உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையான பெல்ஜியத்தின் கிம் கிளிஸ்டர்ஸ் தனது உறவினர் வீட்டுத் திருமணத்தில் கலந்து கொண்டபோது அவருக்குக் கணுக்காலில் காயம் ஏற்பட்டது.

அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் கிளிஸ்டர்ஸ் நான்கு முதல் ஆறு வாரம் வரை விளையாட முடியாது என்று தெரிவித்துள்ளனர். இதனால் அடுத்த மாதம் நடைபெறும் பிரெஞ் ஓப்பன் போட்டியில் கிளிஸ்டர்ஸ் ஆடுவது சந்தேகம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சங்கக்காரவின் முடிவு ஆச்சரியமளிக்கிறது!



(கொழும்பு)

இலங்கைக் கிரிக்கெட் சபையின் உயர் மட்ட அமைப்புக்களில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் அணியில் புதிய இரத்தம் பாய்ச்சப்படும் என தேர்வாளர்கள் தலைவர் துலிப் மெண்டிஸ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: சில விடயங்கள் சாதகமாகவும், பாதகமாகவும் அமையும். ஆனால், சில மாற்றங்கள் அவசியம்.

தேசிய வீரர்களை வழங்கும் 'ஏ' தர அணியொன்றே முதன்மைத் தேவை. எதிர்வரும் மாதாங்களில் சில சர்வதேச தொடர் வர இருக்கின்றது. 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் மிக முக்கியமானது., இதற்கேற்ற வகையில் அணியைத் தயார் செய்யவேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது.

சில முடிவுகளை எடுக்க ஒன்றோ, இரண்டோ வாரங்கள் தேவைப்படும். சங்கக்காரவின் இராஜினாமா எனக்குப் பெரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அதுவும் ஒரு நாள் அணித் தலைவர் பதவியிலிருந்தும் இராஜினாமாச் செய்தது இன்னும் ஆச்சிரியமாக இருக்கிறது எனத் தெரிவித்தார்.




# அணியை வெற்றிகரமாக நடத்துவதற்கு நீண்ட கால நிமயனம் தேவையாகும்!

## சங்கக்கார அறிவுரை

(கொல்கொத்தா)

டில்சான் மற்றும் அஞ்சலோ மத்தியூஸ் இருவரும் அணித் தலைமைக்குத் தயாராக இருந்தாலும் அவர்களுக்கு நீண்ட கால நியமனம் கொடுப்பதன் மூலமே தலைமைப் பதவியை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும் என சங்கக்கார தெரிவித்தார்.


இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: டில்சான், மத்தியூஸ் ஆகிய இருவரும் தகுதியானர்கள் என எண்ணினால் அவர்களில் டில்சான் பொருத்தமானவர். ஆனால், வயது இவருக்குத் தடையாக இருக்கும்போலத் தெரிகிறது.

தன் உடல் தகுதியை இவர் பேணிக் கொண்டால் அடுத்த உலகக் கிண்ணப் போட்டிகளில் இவர் விளையாடுவது நிச்சயம்.

மறுபுறம் மத்தியூஸ் அணித் தலைவரானால் அவருடன் தேர்வாளர்கள் சேர்ந்து நிற்கவேண்டும். ஒரு வருடமோ, இரண்டு வருடமோ அவர் சாதிக்காவிட்டாலும், அவரிடம் நம்பிக்கையை வளர்த்தெடுக்க தேர்வாளர்கள் முன்வரவேண்டும். ஆச்சரியங்களை எதிர்பார்க்காமல், இளவயது வீரர் நன்றாகச் செய்வார் என்ற நம்பிக்கையை மத்தியூஸ் மீது வைக்கவேண்டும்.

அணிக்கு நல்லது என்பதாலேயே நான் இராஜினாமாச் செய்யத் தீர்மானித்தேன். இதன் மூலம் கிரிக்கெட் மீதான எனது ஈடுபாடு குறைந்துவிட்டதாக எவரும் நினைக்கவேண்டாம். கிரிக்கெட்டில் சாதிக்கவேண்டும் என்ற உத்வேகம் எனக்குத் தொடர்ந்தும் உள்ளது.


நான்கு வருடத்தின் பின்னர் உலகக் கிண்ணப் போட்டி வரும் நிலையில் இரண்டு வருடங்களுக்குப் பின்னர் தலைமை மாற்றம் பற்றிச் சிந்திக்கக்கூடாது. ஏனெனில், அது உலகக் கிண்ணப் போட்டிகளைப் பாதித்துவிடும்.



அதற்காக இப்பொழுதே அணித தலைவரை நியமித்து பயிற்றுவிக்க வேண்டும் அதற்காக அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படவேண்டும்.

இதற்கு என்னாலான முழு ஒத்துழைப்பும் வழங்குவேன் என்றார்.

## 9 ஓட்டங்களால் வெற்றி



(கொல்கத்தா)

டெக்கான் சார்ஜர்ஸ் அணியை 9 ஓட்டங்களால் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி வெற்றிபெற்றது.

கொல்கத்தா மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் ஆடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கலிஸ் 45 பந்துகளில் 53 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் மனோஜ் திவாரி 30, கம்பீர் 29 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு 164 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய டெக்கான் சார்ஜர்ஸ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்று ஒன்பது ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் சிப்ளி 40 பந்துகளில் 48 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். மற்றும் கிறிஸ்டியன் 13 பந்துகளில் 25 ஓட்டங்களைப் பெற்றார். போட்டியின் ஆட்டநாயகனாக கலிஸ் தெரிவானார்.

## சானியா ஜோடிக்குக் கிண்ணம்



(சார்லஸ்டன்)

பேமிலி சர்க்கிள் கோப்பை டென்னிஸ் போட்டியில் இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா ஜோடி சம்பியன் பட்டம் வென்றது.

இப்போட்டி அமெரிக்காவில் உள்ள சார்லஸ்டன் நகரில் நடைபெற்றது.

இதன் பெண்கள் இரட்டையர் பிரிவில் இறுதிப் போட்டியில் சானியா மிர்சா (இந்தியா), எலினா வெஸ்னினா (ரஷ்யா) ஜோடி, அமெரிக்காவின் பெதானி மாடெக்-மெக்ஹன் ஷாக்னெஸ்சி ஜோடியை எதிர்கொண்டது.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் சானியா மிர்சா ஜோடி 6-4, 6-4 என்ற நேர் செட்டில் அமெரிக்க ஜோடியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

5ஆவது போட்டியில் இணைந்து ஆடிய இந்த ஜோடி பெற்ற 2ஆவது பட்டம் இதுவாகும். ஏற்கனவே இந்தியன்வெல்ஸ் போட்டியில் சம்பியன் பட்டம் வென்று இருந்தது. சானியா கைப்பற்றிய 11ஆவது இரட்டையர் பட்டம் இதுவாகும். வெஸ்னினாவுக்கு 5ஆவது பட்டமாகும்.

## வொஸ்னியாக்கி சம்பியன்



(சார்லஸ்டன்)

பேமிலி சர்க்கிள் கோப்பை டென்னிஸ் போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் உலகின் முதல் நிலை வீராங்கனையான மென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார்.

அமெரிக்காவில் உள்ள சார்லஸ்டன் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் ரஷ்யாவின் எலினா வெஸ்னினாவைத் தோற்கடித்தே கிண்ணத்தை அவர் கைப்பற்றிக் கொண்டார்.

இதில் 6-2, 6-3 என்ற நேர் செட்டில் எளிதில் வெற்றிபெற்ற கரோலின் வோஸ்னியாக்கி கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டார்.

# ஆபிரிக்க ஒன்றிய அமைதித் திட்டம் லிபிய அரசாங்கம் ஒப்புதல் அளிப்பு

ஆபிரிக்க கூட்டமைப்பின் அமைதித் திட்டத்தை லிபியாவின் கடாபி அரசு ஒப்புக்கொண்டுள்ளது என தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜகொப் சுமா கூறினார்.

லிபியாவில் அமைதி நடவடிக்கையை மேற்கொள்ள தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜகொப் சுமா மற்றும் அதன் மூன்று ஆபிரிக்கத் தலைவர்கள் லிபியத் தலைவர் கடாபியை தலைநகர் திரிபோலியில் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். இதன்போது ஆபிரிக்க கூட்டமைப்பு முன்வைத்த சமாதானத் திட்டத்திற்கு கடாபி அரசு சம்மதம் தெரிவித்தது.

இதேவேளை முஹம்மர் கடாபி விலகுவது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. எனினும் அது குறித்து தற்போது எந்த விளக்கமும் அளிக்க முடியாது என ஆபிரிக்க கூட்டமைப்பின் சமாதானம் மற்றும் பாதுகாப்புக்கான ஆணையாளர் ரம்டான் லமாரா குறிப்பிட்டார்.

இதனிடையே லிபியாவில் உடனடி யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதே ஆபிரிக்க கூட்டமைப்பின் நோக்கம் என்று தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜகொப் சுமா குறிப்பிட்டார். ஆபிரிக்க கூட்டமைப்பைச் சேர்ந்த தென்னாபிரிக்க, மாலி, கொங்கோ, உகண்டா மற்றும் மொரிடானியா நாடுகளின் முக்கியஸ்தர்கள் இந்த தூதுக் குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

கடாபியைத் தொடர்ந்து சமரச திட்டத்துடன் பேச்சுவார்த்தை நடத்த ஆபிரிக்க ஒன்றியத்தின் தூதுக்குழு பெங்காசி நகருக்கு சென்றது. அக்குழு கிளர்ச்சியாளர்கள் குழுவுடன் பேச்சு வார்த்தை நடத்தியது. இதில் எந்தவிதமான சுமுக முடிவும் ஏற்படவில்லை.

இதைத் தொடர்ந்து ஆப்பிரிக்க யூனியனின் சமரச திட்டத்தை ஏற்க முடியாது என கிளர்ச்சியாளர்கள் குழு மறுத்து விட்டது. கடாபியும், அவரது மகன்களும் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்பதுதான் மக்களின் தலையாய கோரிக்கை. இது குறித்து சமரச திட்டத்தில் எதுவும் இல்லை.

எனவே அத்திட்டத்தை எங்களால் ஏற்க இயலாது. அதை விடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட எங்கள் தியாகிகளின் ரத்தத்தின் மீது எங்களால் பேச்சுவார்த்தை நடத்த முடியாது.

இதுகுறித்து கிளர்ச்சியாளர்கள் குழு தலைவர் முஸ்தபா அப்துல் ஜலீல் நிருபர்களிடம் கூறியதாவது:-

ஆபிரிக்க ஒன்றியத்தின் சமரச திட்டத்தில் கடாபியின் ராணுவம் போர் நிறுத்தம் செய்வது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. ஆனால் கடாபி பதவி விலகுவதுடன் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்பது தான் போராடும் மக்களின் முக்கிய கோரிக்கையாகும்.


எங்களின் வெற்றிக்காக இறுதி வரை போராடி உயிரை விட நாங்கள் தயார். கடவுள் எங்கள் பக்கம் உள்ளார். இறுதியில் எங்களுக்குத்தான் வெற்றி கிடைக்கும்.

இவ்வாறு முஸ்தபா அப்துல் ஜலீல் தெரிவித்தார்.

அதேவேளை நேட்டோ கூட்டுப்படையின் தாக்குதல்கள் நேற்று முன்தினமும் தொடர்ந்தன. நேற்று முன்தினத்தில் மாத்தில் கடாபி ஆதரவுப்படையின் 25 ப்ரங்கிகளைத் தகர்த்ததாக நேட்டோ குறிபபிட்டுள்ளது. இதில் அஜிதபியா பகுதியில் 11 பீரங்கிகள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் மிஸ்ராட்டாவில் 14 பீரங்கிகளைத் தாக்கி அழித்ததாகவும் நேட்டோ குறிப்பிட்டது.

## 103 வயதில் பணிபுரியும் நீதிபதி

(நியூயோர்க்)



அமெரிக்காவில் விசிதா நகரைச் சேர்ந்தவர் வெஸ்லி பிரவுன். 103 வயதான இவர் அங்குள்ள மாவட்ட நீதிமன்றில் நீதிபதியாக பணிபுரிகிறார். இந்தத் தள்ளாத வயதிலும் அவர் சிறப்பாகப் பணியாற்றுகிறார். அவரால் நடக்க முடியவில்லை எனவே சக்கர நாற்காலியில் வருகிறார். கடந்த 49 ஆண்டுகளாக நீதிபதியாக இருக்கிறார். அமெரிக்க அதிபராக இருந்த கென்னடி தனது பதவிக் காலத்தில் 4 பேரை 'பெடரல்' நீதிபதியாக நியமனம் செய்தார். அவர்களில் இவரும் ஒருவர். தற்போது பணி புரியும் நீதிபதிகளில் மிகவும் மூத்தவர் இவர் தான்.

தற்போதுள்ள 1294 பெடரல் நீதிபதிகளில் இவர் 516 ஆவது நபர். ஏற்கனவே ஓயவுபெற்ற இவர் தற்போது பாதிச் சம்பளத்தில் பணி புரிகிறார். அமெரிக்க நீதிபதிகளில் இவர்தான் அதிக நாள் பணிபுரிந்தவர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

## மக்களைக் கவரும் நாடுகளில் முதலிடம் பிடித்தது அமெரிக்கா

(சென்னை)

ஐ.நாவுக்கான உலக சுற்றுலா அமைப்பின் சார்பில் உலகின் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் மிகப்பெரிய 50 சுற்றுலாத் தலம் கொண்ட நாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டது.

இதில் கடந்த 2010-11 இன்படி அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. 78.95 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துள்ளது.

இரண்டாம் இடத்தில் பிரான்ஸ் உள்ளது. இது 60.88 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்துள்ளது.

மூன்றாம் இடத்தில் ஆசிய நாடான சீனா 52.02 மில்லியன் சுற்றுலா பயணிகளை ஈர்த்துள்ளது.

சீனாவிற்கு ஸ்பெயின் நிதி உதவி செய்து வந்ததன் காரணமாக சீனாவில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 9 சதவீதம் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

எனினும் இந்தியா மிகவும் பின் தங்கி 41 ஆவது இடத்தில் உள்ளது. மேலும் ஐ.நாவின் அறிக்கையின்படி முதல் 10 ஆசிய நாடுகளில் மலேஷியா முதலிடம் வகிக்கிறது.

இந்நாடு கடந்த 2010-11 ஆம் ஆண்டு 24.06 மில்லியன் சுற்றுலா பயணிகளை ஈர்த்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.





விளானை சனசமூக நிலையம் விளானை கிராம அபிவிருத்திச் சங்கம்,
இணைந்து நடாத்தும்
முன்பள்ளி பாலர் பாடசாலையின்
விளையாட்டுப் போட்டியும், ஆண்டு விழாவும்
இடம் : விளானை சனசமூக நிலைய முன்றல்
காலம் : 14.04.2011 வியாழக்கிழமை
நேரம் : பிற்பகல் 2.30 மணி



தலைமை
திரு.மு.சு.கந்தையா
(முன்னாள் தலைவர், சனசமூக நிலையம், விளானை)

பிரதம அதிதி
மாண்புமிகு அமைச்சர்
கே.என்.டக்ளஸ் தேவானந்தா
(பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரும் ஈ.பி.டி.பி யின் செயலாளர் நாயகமும்)

சிறப்பு விருந்தினர்கள்
★ யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா
★ திரு.க.கமலேந்திரன் (கமல்)
(ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர்)
திரு.வி.கண்ணன் (ரஜனி)
(ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் காரைநகர் அமைப்பாளர்)

விசேட நிகழ்வு: சிறப்புப் பட்டிமன்றம் (தென்னிந்தியாவின் புகழ்பூத்த சிறப்புப் பட்டிமன்றப் பேச்சாளருடன். காரைநகரின் முன்னணிப் பேச்சாளர்களும் கலந்து பங்குபற்றும்
'தற்காலத்தில் சமுதாய மேம்பாட்டிற்கு நகர்ப்புறச் சூழலா? கிராமப்புறச் சூழலா உகந்தது?'

தினமுரசு
ஊடக அனுசரணை


விசேட இசைக்குழு
அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவினாலும், அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களாலும் கௌரவிக்கப்பட்ட ஈழத்து சௌந்தராஜன், வி.அருள்ஜோதியின்
இசை நிலா இசைக்குழு

விளானை
சனசமூக
நிலையம்
காரைநகர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# இந்திய மக்களின் முகங்களில் மலர்ச்சி ஏற்பட வேண்டுமாம்

## அப்துல் கலாமின் நிறைவேறாத ஆசை



(சென்னை)

மின் தட்டுப்பாட்டைச் சமாளிக்க தமிழ்நாட்டில் அனைத்து இடங்களிலும் சூரியஒளி மின்சாரத்தை அதிகளவில் பயன்படுத்தவேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் யோசனை தெரிவித்தார்.

மேல்மருவத்தூர் அடிகளார் திருமண மண்டபத்தில் மாணவர்கள் கலந்துரையாடல் விழா நடந்தது. இதில் சுமார் 3 ஆயிரம் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் கலந்துகொண்டு பேசி னார். அப்போது அவர் கூறியதாவது -

மாணவர்கள் நல்ல ஒழுக்கத்துடன் சிறந்த மாணவர்களாகத் திகழவேண்டும். 54 கோடி இளைஞர்களைக் கொண்ட ஒரே நாடு நம் இந்தியா. மாணவர் கள் எண்ணத்தில் நல்லொழுக்கம் இருந்தால் குடும்பத்தில் அழகு மிளிரும். இதனால் நாட்டில் சீர்முறையும், உலகத்தில் அமைதியும், சாந்தமும் நிலவும் என்றார்.

பின்னர் மாணவர்கள் கேட்ட கேள்விக்கு அப்துல் கலாம் பதிலளித்தார்.


விவசாய நிலங்கள் மனைகளாகவும், தொழில் நகரங்களாகவும் மாற்றப்படுகிறதே? என்று ஒரு மாணவர் கேட்டார். அதற்கு அப்துல் கலாம் பதில் அளிக்கையில், இந்தியாவில் கிராமங்களில் இடைவெளி குறைந்து 6,500 கிராமங்கள் நகரமாக வளர்ந்துள்ளது.

இல்லாமை இல்லாத நிலை இந்தியாவிற்கு வர வேண்டும். 2020 ஆம் ஆண்டு நமக்கு 40 கோடி தொன் உணவு• இருப்புத் தேவைபபடுகிறது. அதற்காக நாம் உயர் ரக விதைகள் மூலம் உற்பத்தியைப் பெருக்கி, உயர்ந்த தொழில்நுட்பம் மற்றும் நவீன முறையிலான தானிய கிடங்குகளைப் பல மடங்கு உயர்த்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

மற்றொரு மாணவி, உங்களின் நிறைவேறாத ஆசை ஏதாவது இருக்கிறதா? எனக் கேட்டதற்கு, இந்தியாவிலுள்ள 100 கோடி மக்களின் முகத்தில் மலர்ச்சி ஏற்படவேண்டும் என்றார்.

மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படக் காரணமும் அதனைச் சரிசெய்ய எந்த வகையான நடைமுறையை மேற்கொள்ளலாம் என ஒரு மாணவர் கேட்ட கேள்விக்கு, தமிழ் நாட்டில் அனைத்து இடங்களிலும் சூரிய ஒளியிலிருந்து தயாரிக்கப் படும் மின்சாரத்தை அதிகளவில் பயன்படுத்த வேண்டும் என்று பதில் அளித்தார்.

# சுவாசக் கோளாறைத் தீர்ப்பதற்கு சாய்பாபாவிற்கு தீவிர சிகிச்சை



(பள்ளிப்பட்டு)

ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் ஆசிரமம் அமைத்து ஆன்மீக பணியில் ஈடுபட்டு வருபவர் சத்ய சாய்பாபா (85). இவருக்கு உலகம் முழுவதும் எராளமான பக்தர்கள் உள்ளனர். இந்த நிலையில் கடந்த மாதம் 28 ஆம் திகதி சாய்பாபா உடல் நலக் குறைவு காரணமாக அங்குள்ள சத்ய சாயி ஆஸ்பத்திரியில் சேர்க் கப்பட்டார்.

அவருக்கு டாக்டர்கள் நேற்றுடன் 16 ஆவது நாளாக சிகிச்சை அளித்து வருகிறார்கள். அவரது உடலின் முக்கிய உறுப்புகள் ஓரளவு செயற்படத் தொடங்கியுள்ளன. சிறுநீரகச் செயற்பாடும் திருப்திகரமாக உள்ளது. அவருக்கு அடிக்கடி நோய்த் தொற்று ஏற்படுவதால் அவருக்கு நோய் எதிர்ப்பு மருந்துகள் கூடுதலாக அளிக்கப்படுகிறது.

மற்றைய உறுப்புகள் ஓரளவு செயல்பட்டாலும் சாய் பாபாவால் செயற்கைச் சுவாசக் கருவி இல்லாமல் சுவாசிக்க முடியவில்லை. வைத்தியர்கள் கருவியை அகற்றிப் பார்த்தபோது அவருக்குக் கடுமையாக மூச்சுத் திணறல் ஏற்பட்டது. இதையடுத்து வைத்தியர்கள் அவரது சுவாசக் கோளாறைத் தீர்க்க தீவிர சிகிச்சை அளித்து வருகிறார்கள்.




சாய்பாபாவுக்கு சுவாசக் கோளாறு சரி செய்யப்பட்டால் தான் அவரை விடுவிக்க முடியும் என்று . வைத்தியர்கள் தெரிவித்தனர். சாய்பாபா முழுமையாக நலம் பெற வேண்டி ஆந்திரா முழுவதிலும் உள்ள அவரது பக்தர்கள் கோவில்களில் வழிபாடு நடத்தி வருகிறார்கள். சிறப்பு பூஜைகளும் செய்யப்பட்டு வருகின்றன.

# தமிழக சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க கூட்டணிக்கே வெற்றி

## என்கிறார் கருணாநிதி



(சென்னை)

இன்று நடைபெறவுள்ள தமிழக சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க கூட்டணிக்கே வெற்றி வாய்ப்பு உள்ளது என, கருணாநிதி கூறியுள்ளார்.

தி.மு.க தலைவர் கருணாநிதி சட்டமன்றத் தேர்தலில் திருவாரூர் தொகுதியில் போட்டியிடுகிறார். தி.மு.க மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் பங்கேற்ற தி.மு.க தேர்தல் பொதுக் கூட்டம் திருவாரூரில் நடைபெற்றது.

இறுதிகட்டப் பிரசாரத்தை திருவாரூர் கீழ்வீதியில் நடந்த பொதுக்கூட்டத்தில் தி.மு.க தலைவர் கருணாநிதி நிறைவு செய்து பேசினார். பொதுக்கூட்டம் முடிந்த பின்னர் தி.மு.க தலைவர் கருணாநிதி செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

இது வெற்றிக் கூட்டணி. மக்களுக்கு நிறையச் செய்துள்ளோம். ஆட்சி அமைக்கும் அளவுக்கு அதிக இடங்களில் வெற்றி பெறுவோம் என்று கூறினார்.

பிரசாரம் முடிந்து ரயில் மூலம் நேற்றுக் காலை கலைஞர் சென்னை திரும்பினார். எழும்பூரில் தி.மு.கவினர் கலைஞரை வரவேற்றனர். அப்போது செய்தியாளர்களிடம் பேசிய கருணாநிதி சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க கூட்டணிக்கு வெற்றி வாய்ப்புப் பிரகாசமாக இருக்கிறது எனறார்.

# ஸ்பெக்ட்ரம் வழக்கு விசாரணையை தினமும் நடத்த நீதிமன்றம் உத்தரவு

(சென்னை)

தனி நீதிமன்றில் நடந்து வரும் ஸ்பெக்ட்ரம் வழக்கு விசாரணையை ஒத்திவைப்பு ஏதுமின்றி தினசரி நடத்துமாறு மத்திய அரசுக்கு நீதிபதிகள் ஜி.எஸ்.சிங்வி, ஏ.கே.கங்குலி ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்றக்குழு உத்தரவிட்டுள்ளது.


மேலும், மத்திய அரசின் ஆட்சேபணையையும் மீறி, இந்த வழக்கின் சிறப்பு அரசு சட்டத்தரணியாக யு.யு.லலித்தை நியமிக்குமாறு உத்தரவிட்டுள்ளது.

ஸ்பெக்ட்ரம் வழக்குத் தொடர்பான எந்த மனுவையும் எந்த நீதிமன்றமும் விசாரணைக்கு ஏற்கக்கூடாது என்றும், அத்தகைய மனுக்கள் உயர் நீதிமன்றில் தான் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

ஸ்பெக்ட்ரம் வழக்கில், வருகிற 24 ஆம் திகதி துணை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்று சி.பி.ஐ. தெரிவித்தது. இதையடுத்து, அடுத்தகட்ட விசாரணையை 26 ஆம் திகதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

# ஒழுக்கமானவராக உள்ளவரே தலைவராக இருக்க முடியும்

## விஜயகாந்திற்கு அன்புமணி அறிவுரை



ஒரு தலைவர் என்றால் ஒழுக்கமானவராக இருக்க வேண்டும். அப்போது தான் மக்களுக்கு நல்லது செய்ய முடியும் என, விஜயகாந்திற்கு அன்புமணி ராமதாஸ் அறிவுரை கூறியுள்ளார்.

காஞ்சிபுரத்தில் தேர்தல் பிரசாரத்தில் பேசிய அன்புமணி ராமதாஸ், 10 ஆண்டுகள் ஆடசி செய்த ஜெயலலிதா ஆட்சியில் ஏதேனும் திட்டங்களை நிறைவேற்றியுள்ளாரா? விஜயகாந்த் வேட்பாளர்களை அடிக்கிறார்.

ஜெயலலிதாவும், விஜயகாந்தும் சேர்ந்து பிரசாரம் செய்தால், நம்மை அடித்து விடுவார் என்ற பயத்தில் ஒரே மேடையில் பிரசாரம் செய்யவில்லை.

ஆப் அடித்தால் ஆப்பு அடிபபேன் என்றார். ஒரு தலைவர் என்றால் ஒழுக்கமானவராக இருக்க வேண்டும். அப்போது தான் மக்களுக்கு நல்லது செய்ய முடியும். கலைஞர் ஆட்சியில் நிறைவேற்றப்படும் திட்டங்களை, ஜெயலலிதா நிறுததுவது வழக்கமாகவுள்ளது.

கலைஞர் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கினார். நெசவாளர்களுக்கு 100 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்கினார். மக்களின் பசியைப் போககியவர். மீண்டும் ஆட்சிக்கு வந்தால் கல்விக் கடன் ரத்து செய்யப்படும். மாணவர்களுக்கு லப் டொப் வழங்கப்படும் என தெரிவித்துள்ளார். ஜெயலலிதா ஆடு, மாடு இலவசமாக தருகிறேன் என்கிறார். நம் பிள்ளைகளை ஆடு, மாடு மேய்க்க சொல்கிறார் என்றார்.




### தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்



பெயர்: ஜெ. அக்சிகா
முகவரி: நெல்லியடி, பருத்தித்துறை.

பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. .................................. பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# கெரவலபிட்டிய மின்னுற்பத்திக்கு மீண்டும் எரிபொருள் விநியோகம்

(கொழும்பு)

கெரவலபிட்டிய மின்சார உற்பத்தி நிலையத்திற்கு மீண்டும் எரிபொருள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கனியவளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கனியவளக் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கவேண்டியிருந்த நிலுவைக் கட்டணத்தொகை கிரமமாகக் கிடைத்து வருவதன் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எரிபொருள் விநியோகம் தொடர்பில் கூட்டுத்தாபனத்திற்கு 380 கோடி ரூபா செலுத்தப்படாமல் நிலுவையில் இருந்ததாகவும்,தற்சமயம் கட்டம் கட்டமாக எரிபொருளுக்கான கட்டணம் செலுத்தப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த வாரம் முதல் எரிபொருள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், வருடாந்தம் உற்பத்திக்குத்



தேவைப்படும் எரிபொருகளின் அளவையும் அறிவிக்குமாறு கெரவலபிட்டிய மின்னுற்பத்தி நிர்வாகத்திடம் கோரப்பட்டுள்ளது மேற்குறித்த மின்சார உற்பத்தி நிலையத்தை செயற்படுத்தாமல் வைத்திருந்த நிலையில்,மின்சார சபைக்கு 10கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக சக்தி வலுத்துறை அமைச்சர் பாட்டாளி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

# தரமான மருந்து விநியோகம் இந்திய அரசு உறுதியளிப்பு

(கொழும்பு)

தரமான மருந்துப் பொருட்களை தாமதமின்றி சீராக விநியோகிப்பதை இந்திய அரசாங்கம் உறுதிப்படுத்தும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா நேற்றுமுன்தினம் உறுதியளித்துள்ளார்.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவை நேற்றுமுன்தினம் சந்தித்த போதே இந்திய உயர் ஸ்தானிகர் இந்த உத்தரவாதத்தை வழங்கினார்.

அத்துடன், மருந்துவகைகளை உரிய முறையில் விநியோகிக்கத் தவறிய இந்திய நிறுவனங்கள் குறித்த அறிக்கையொன்றை வழங்குமாறும் அமைச்சரிடம் அவர் கோரியுள்ளார்.

இதேவேளை இந்திய மருந்தாக்கல் நிறுவனங்களின் உயர் மட்டக் குழு ஒன்று விரைவில் இலங்கை வர



விருப்பதாக த ஹிந்துஸ்தான் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. சுகாதார அமைச்சினால் 10 இந்திய மருந்தாக்கல் நிறுவனங்களில் இருந்து மருந்துக் கொள்வனவுக்கு தடை விதித்துள்ள நிலையில் இந்த விஜயம் மேற்கொள்ளப்படுகிறது. இது தொடர்பில் இலங்கை இந்திய உயர்மட்ட ராஜதந்திரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## அலரிமாளிகையில் திருட்டு: மூவருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

அலரி மாளிகையிலுள்ள ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் அலுவலகத்திலிருந்து எழுது பொருட்களைத் திருடியதாக குற்றம் சுமத்தப்பட்ட 3 சந்தேக நபர்களை ஏப்ரல் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை விடுமுறைக்கால நீதிமன்ற நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் இந்திக கருணஜீவ, குற்றப் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி என்.அபேவர்தனவிடம் செய்த முறைப்பாட்டையடுத்து தாம் விசாரணைகளை மேற்கொண்டதாக குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஜனாதிபதியின் பிரத்தியேக செயலக அலுவலகத்தில் அலுவலக ஊழியர்களாகப் பணியாற்றும் இரு நபர்கள் அலரி மாளிகையின் களஞ்சியத்திலிருந்து எழுதுபொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கான படிவத்தில் மாற்றங்களைச் செய்து பொருட்களைத் திருடியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# வடக்கு,கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களில் 95 வீதமானோர் மீள்குடியமர்த்தப்பட்டனர்

(கொழும்பு)

வடக்கு,கிழக்குப் பகுதியில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வந்தவர்களில் 95 வீதமானோர், அவர்களின் சொந்த இடத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் பஸநாயக்க தெரிவித்தார்.

வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி,முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் மீள்குடியேறிய மக்களின்,வீடுகள் பகுதியளவில் சேதமடைந்திருந்தால் அவற்றைத் திருத்தியமைப்பதற்கு வீடமைப்பு நிர்மாண அமைச்சு, மீள்குடியேற்ற அமைச்சுக்கு தேவையான உதவிகளை வழங்கி வருகின்றது.

மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் மீள்குடியேறிய மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு காணிகளை அடையாளம் காணும் பணிகள் மாவட்ட அரச அதிபர்கள் மூலமாக பிரதேச செயலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அத்துடன்,நலன்புரி நிலையங்களிலிருந்து தமது சொந்த இடங்களில் மீள்குடியேறிய மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு அமைச்சர் விமல் வீரவன்ச இணக்கம் தெரிவித்துள்ளார். இதன்படி வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களுக்கும் 200 வீடுகள் வீதம், ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இதேவேளை இடம் பெயர்ந்த மக்களுக்கு,ஐம்பதாயிரம் வீடுகளை இந்திய அரசாங்கம் அமைத்துக்கொடுக்கவுள்ளது. இதன் முன்னேற்றப் பணிகளை அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கவனித்து வருகின்றார்.

## மீள்குடியேற்ற அமைச்சு தெரிவிப்பு

இரண்டு லட்சத்து 80ஆயிரம் பேர் உள்நாட்டில் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வந்தனர். இவர்களில் இதுவரை இரண்டு லட்சத்து 52ஆயிரம் பேர் மீளவும் தமது இடங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். மிகுதியாக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களையும்.அவர்களது சொந்த இடத்தில் மீள் குடியமர்த்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றோம்.

மீள்குடியேற்றப்படாத பகுதிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதனை பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியவுடன் அவர்கள் உடனடியாக மீள்குடியமர்த்தப்படுவர்.

முல்லைத்தீவு,கிளிநொச்சி மாவட்டங்களைத் தவிர வடக்கு,கிழக்கின் ஏனைய பகுதிகளில் கண்ணிவெடிய கற்றும் பணிகளை பாதுகாப்பு அமைச்சு நிறைவு செய்து வருகிறது. முல்லைத் தீவு மாவட்டத்திலும் பெரும்பாலான இடங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பகுதிகளிலும் கண்ணிவெடி அகற்றும் பணிகள் எவ்வேளையிலும் நிறைவு பெறலாம். இந்தப் பணிகள் நிறைவடைந்து பாதுகாப்பு அமைச்சு எமக்கு அனுமதிவழங்கினால்,நாம் எஞ்சியுள்ள மக்களையும் உடனடியாக மீள்குடியேற்றுவோம்.

மீள்குடியேறிய மக்களுக்கு உலர் உணவுநிவாரணம்,கூரைத்தகடுகள், மருத்துவவசதி,மற்றும் பிற உதவிகளும் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மின்சாரத் தடைக்கு தீர்வு

(கொழும்பு)

புத்தாண்டு காலங்களில் மின்சார தடை ஏற்படும் பட்சத்தில் தாம் அதனை உடனடி வழமைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுப்பதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. புத்தாண்டு காலங்களில் மின்சாரம் தடைப்படுமாயின் மின் பாவனையாளர்கள் 1987 மற்றும் 1910 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி அறிவிக்க முடியும் எனவும் சபை தெரிவித்துள்ளது.

இவ்வாறு குறித்த இலக்கங்களுக்கு அழைப்பினை ஏற்படுத்தி அறிவிப்பதன் மூலம் மின்சாரத்தினை உடனடியாக பெற்றுக் கொள்ள முடியும் எனவும் இலங்கை மின்சார சபை நம்பிக்கை வெளியிட்டது..

# சட்டவிரோதமாக இறக்குமதியான தக்காளிகள் அனைத்தும் அழிப்பு

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட தக்காளிகள் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் தம்புள்ளையில் இந்திய தக்காளிகளை விற்பனை செய்தவர்களைக் கைது செய்து தக்காளிகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டன.

உள்ளூர் தக்காளிப்பழம் கிலோ 120 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட போது இந்திய தக்காளிகள் கிலோ 60 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இதனால் உள்ளூர் விவசாயிகள் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து இந்திய தக்காளிகள் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. இவ்வாறு பச்சை மிளகாயும், பூசனிக்காய்களும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அவற்றை விற்பனை செய்த வியாபாரிகளைப் பொலிஸார் கைது செய்தனர். இந்தியாவில் இருந்து சட்ட விரோதமாக தக்காளிகள் இறக்குமதி செய்யப்பட்டமைக்கு தமது தவறே காரணம் என சுங்கத் திணைக்களத்தினர் ஒத்துக்கொண்டுள்ளனர்.

5ஆயிரம் கிலோ தக்காளி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும், புதிதாக பதவியில் சேர்ந்துள்ளவர்களாலேயே இந்தத் தவறு இடம்பெற்றுள்ளதாகவும் சுங்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

எனினும் தக்காளிகள் அனைத்தையும் அழித்துவிட்டனர் என தெரிவிக்கப்படுகிறது. இதேபோல் அண்மையில் கேரளாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 10 மில்லியன் தேங்காய்களையும் கடலில் கொட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



யாழ்.பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைப் பிரிவின் சங்கீதபீட மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்து கலந்துரையாடிய வேளை,விரிவுரையாளர் நவரட்ணம்,ஜனாதிபதிக்கு பொன்னாடை போர்த்தி,நினைவுப் பரிசை வழங்குவதையும்,மாணவர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடுவதையும் காணலாம்.

# துரிதமடையும் வீதி அபிவிருத்தி

(வடமராட்சி)

வவுனியா - யாழ்ப்பாணம் ஏ-9 வீதிப் புனரமைப்பு வேலைகளை 'மெகா' நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

இதன் முதற்கட்டப் பணியாக சேதமடைந்த பாலங்கள் புனரமைப்பு செய்யப்பட்டு வருவதுடன், பாலப் புனரமைப்பு வேலைகளுக்குப் பின்னர் வீதி அகலிப்பு வேலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்நிறுவனம் கடந்த காலங்களில் ஏற்பட்ட மழையினால் சேதமடைந்த ஏ-9 பிரதான வீதியை செப்பனிட்டு வருகிறது.

இதைவிட ஓமந்தை பிரதான வீதி அகலிப்பு வேலைகளை இலகுவாக மேற்கொள்வதற்கு வசதியாக இந்நிறுவன அதிகாரிகள் பனிச்சன்குளம், பளை ஆகிய இடங்களில் அலுவலகங்களை அமைத்து புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இவ்வீதி அகலிப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்கான கனரக வானங்கள் மற்றும் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (100)

# புதுமுறிப்பு – ஊற்றுப்புலம் பகுதிக்கு மின்விநியோகத்தை விரைவுபடுத்த கோரிக்கை

(கிளிநொச்சி)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வேகமாக மேற்கொள்ளப்பட்டு வந்த மின் விநியோகம் தங்கள் கிராமங்களிலிருந்து சில கிலோ மீற்றர்கள் முன்னால் நின்று விட்டதாகவும், எனவே அதனை விரைவுபடுத்தி தங்கள் கிராமங்களுக்கும் மின்சாரத்தை வழங்குமாறும் செல்வாநகர், புதுமுறிப்பு, ஊற்றுப்புலம் மக்கள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏ-9 வீதி டிப்போ சந்தியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட மின் விநியோகத்திட்டம் சேவியர் கடைச்சந்தியுடன் நின்று விட்டதாகவும், எனவே அதிலிருந்து சில கிலோ மீற்றர்கள் அப்பாலுள்ள மேற்படி தமது கிராமங்களுக்கு பல மாதங்கள் கடந்தும் இது வரைக்கும் மின் விநியோகத்திற்கான ஆரம்பகட்ட பணிகள் எதுவும் இடம்பெறவில்லை எனவும் தெரிவித்த அம்மக்கள், தங்கள் கிராமங்களுக்கான மின் விநியோகத்தையும் விரைவுபடுத்தித் தந்துதவுமாறும் கேட்டுள்ளனர். (29)

# ஹட்டனில் புதிய வைத்தியசாலை; இந்திய அரசாங்கம் நிதியுதவி

(கொழும்பு)

ஹட்டன் - டிக்கோயாப் பிரதேசத்தில் 150 படுக்கைகளுடன் பூரண வசதிகள் கொண்ட வைத்தியசாலையொன்றை அமைத்துத் தருவதாக இந்திய அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

சுகாதார உதவித் திட்டத்தின் கீழ் இவ்வைத்தியசாலை அமைக்கப்படவுள்ளதாகவும் இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் கே காந்தாவுக்கும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான கலந்துரையாடலின்போது இதற்கான உறுதிமொழி அளிக்கப்பட்டதாகவும் சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆதார வைத்தியசாலைகளுக்கு மருத்துவக் கருவிகளை வழங்கவும் இந்தியா சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, தவறிழைத்த மருந்து விநியோகஸ்தர்களுக்கு தண்டனையளிப்பதற்கான நடவடிக்கையை இந்தியா மேற்கொள்ளும் என இந்திய உயர் ஸ்தானிகர் தெரிவித்ததாக நேற்று முன்தினம் வெளியான செய்தி தவறானது என இலங்கை சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

மருந்து விநியோகம் தொடர்பான கேள்வி நடைமுறைகளை மீறும் இந்திய மருந்து விநியோகஸ்தர்களுக்கு எதிராக விசாரணை நடத்துமாறு இலங்கை கோரியுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# கொழும்பில் கடன் அட்டை மோசடி; சூத்திரதாரிகள் இருவர் மடக்கிப்பிடிப்பு

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப் பகுதிகளிலும் உள்ள தன்னியக்கப் பணப்பரிமாற்று இயந்திரத்தில் 12 மில்லியன் ரூபா பெறுமதியான பண மோசடி இடம்பெற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரத்தில் மோசடியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படும் இருவர் விசேட குற்றத்தடுப்புப் விசாரணை திணைக்கள பிரிவினரால் இரத்மலானையில் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி கூறினார்..

இவர்களில் ஒருவர் இரத்மலானையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் போலியான கடனட்டையைப் பயன்படுத்தி பண மோசடி செய்ய முற்பட்ட போது கைதுசெய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இச்சந்தேகநபர்கள் கொழும்பிலுள்ள மூன்று முன்னணி வங்கிகளின் தன்னியக்க பணப் பரிமாற்று இயந்திரத்திலிருந்து பெருந்தொகையான பணத்தை மோசடி செய்துள்ளனர். 11, 896,600 ரூபா பண மோசடி இடம்பெற்றுள்ளதாக நம்பப்படுகிறது.

இந்த மோசடி குறித்து கொமர்ஷல் வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, நேஷன் ட்ரஸ்ட் வங்கி ஆகியவற்றின் முகாமையாளர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இச்சந்தேகநபர்களுக்கு சர்வதேச ரீதியில் தொடர்பிருப்பதாக பொலிஸாரின் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

# இந்திய கைதிகள் சிறை மாற்றம்

(கொழும்பு)

போதைப்பொருள் வைத்திருந்த விவகாரத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள சுமார் 43 இந்தியர்கள் தமது எஞ்சிய தண்டனைக் காலத்தை இந்தியச் சிறைகளில் கழிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையில் கைதிகள் இடமாற்றம் தொடர்பாக 9 மாதங்களுக்குமுன் செய்துகொள்ளப்பட்ட உடன்பாட்டிற்கு இணங்க இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் கைதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவ்விண்ணப்பங்கள் பூர்த்திசெய்யப்பட்டு மீண்டும் எமக்கு கிடைத்தவுடன் அவர்கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு அங்கு தண்டனையை அனுபவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என இந்திய உயர் ஸ்தானிகராலய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த உடன்படிக்கையின்படி விசாரணைகளை எதிர்நோக்கும் கைதிகள் இடமாற்றப்பட மாட்டார்கள். இதனால் 43 கைதிகளில் 3 பேர் தொடர்ந்தும் இலங்கையில் தடுத்துவைக்கப்படலாம்.

நாம் எமது பணிகளை பூர்த்திசெய்துவிட்டோம். பொருத்தமான கைதிகள் குறித்து இலங்கை அதிகாரிகள், எமக்கு அறிவிப்பதற்காக நாம் காத்திருக்கிறோம் என இந்திய உயர் ஸ்தானிகராலய அதிகாரி கூறினார்.


# ஹஜ் யாத்திரை முன் ஏற்பாடுகள்

(கொழும்பு)

ஹஜ் யாத்திரைக்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக இலங்கையில் இருந்து உயர் மட்டக் குழு ஒன்று இந்த மாதம் 27 ஆம் திகதி சவுதி அரேபியாவுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக எரப் நிவ்ஸ் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வருடத்தை விட இந்த வருடம் அதிக அளவான ஹஜ் யாத்திரிகர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த வருடம் நடைபெற்ற ஹஜ் யாத்திரையில் 5800 பேர் இலங்கையில் இருந்து சென்றிருந்ததாகவும் அந்த இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

# ஐ.நா.வின் இளைஞர் தூதராக நடிகர் விக்ரம் தேர்வு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித குடியேற்றத் திட்டத்தின் இளைஞர் தூதராக நடிகர் விக்ரம் தேர்வு செய்யப்பட்டுள்ளார். ஆசியாவை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நடிகர் விக்ரம் தேர்வாகியுள்ளார்.

உலகம் முழுவதும் இருந்து நான்கு நபர்கள் மட்டுமே இத்திட்டத்துக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். கென்யாவின் நைரோபியில் நடைபெறும் 23 ஆவது நிர்வாகக் குழுக் கூட்டத்துக்கு அவர் அழைக்கப்பட்டுள்ளார். அங்கு நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியுள்ள இக்கூட்டம் வரும் 15 ஆம் திகதி வரை நடைபெறுகிறது.

இதுபற்றி நடிகர் விக்ரம் தெரிவிக்கையில், பெருமைக்குரிய ஐ.நா.அமைப்போடு இணைந்து பணியாற்ற வாய்ப்பு கிடைத்ததை மிகப்பெரிய கௌரவமாகக் கருதுகிறேன். ஐ.நா.வின் மனித குடியேற்றத் திட்டத்தின் நோக்கம், ஆரோக்கியமான நகர்ப்புற முன்னேற்றம் மற்றும் சுற்றுச்சூழல் வளர்ச்சி மூலம் பசுமை பொருளாதாரத்தை உருவாக்குவதுதான். ஐ.நா.வின் இந்த நோக்கம் நிறைவேற என்னாலான உதவிகளை வழங்குவேன் என்றார்.

## கொழும்பில்...

பட்டுள்ளமை விசாரணைகளில் வெளிவந்துள்ளது.

பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நேற்று முன்தினம் நள்ளிரவு கொழும்பை அண்டிய பிரதேசமான வெல்லம்பிட்டியின் வென்னவத்தையில் அமைந்திருந்த பிரஸ்தாப ஆயுதத் தொழிற்சாலையை முற்றுகையிட்டுள்ளனர்.

அங்கிருந்து ஆறு துப்பாக்கிகள், 5020 துப்பாக்கி ரவைகள், இரண்டு கூர்வாள்கள், கத்தி, கைக்குண்டுகள் மற்றும் இராணுவ சீருடைகள் என்பவற்றுடன் பெருந்தொகையான கள்ளச்சாராயமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை வரை பிரஸ்தாப தொழிற்சாலையில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

## கடற்பரப்பில்....

இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கும் கப்பலை விநியோகிக்கும் நிறுவனத்துக்கும் இடையில் கைச்சாத்தாகியுள்ளது. இந்தக் கப்பல் தாய்வானில் இருந்து சுமார் 32 கோடி ரூபா செலவில் கொள்வனவு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்குரிய அனுமதி அமைச்சரவையினால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலில் நவீன வசதிகளைக் கொண்ட எதிர் ஒலி சமிக்ஞைகளின் மூலம் கடலின் அடிப்பரப்பில் உள்ள பொருட்களை இலகுவாக அடையாளம் காண்பதுடன் அது குறித்த முழு விபரங்களையும் பெற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். நகர்...

அவதானிக்கக்கூடியதாக உள்ளது. உடுபுடைவைகள், அலங்காரப் பொருட்கள் என்பன மிகக்குறைந்த விலைகளில் இம்முறை விற்பனை செய்யப்படுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

மக்கள் கூட்டம் அதிகமாகக் காணப்படுவதன் காரணமாக திருட்டுச் சம்பவங்கள் மற்றும் போக்குவரத்து நெரிசல்களைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிஸார் சீருடையணிந்தும், சிவில் உடையிலும் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மி,கா)

## ஆசியாவின்....

பிலிப்பின்ஸ், தஜிகிஸ்தான், தாய்லாந்து, உஸ்பெகிஸ்தான், வியாட்நாம் ஆகிய நாடுகள் பயனடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இயற்கை அனர்த்தத்தினால் ஏற்படும் அழிவுகளை முன் எச்சரிக்கை நடவடிக்கை மூலம் கணிசமான அளவு கட்டுப்படுத்த முடியும் எனவும் சீனா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

## மன்னார் மணல் திட்டு....

தளபதி ரியர் அட்மிரல் றொகான் அமரசிங்க, மன்னார் அரசாங்க அதிபர் வேதநாயகம் மற்றும் கடற்படை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

தலைமன்னாரின் பழைய இறங்குதுறையில் இருந்து தினமும் காலை 8 மணிக்கு புறப்படும் படகுகள் இரண்டாவது மணல்திட்டியை சுமார் இரண்டு மணித்தியாலங்களில் சென்றடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயணத்துக்கு உள்ளூர் பயணிகளிடம் தலா 500 ரூபாவும், வெளிநாட்டு உல்லாசப் பயணிகளிடம் தலா 1000 ரூபாவும் அறிவிடப்படுவதுடன், சுற்றுலாப் பயணிகளுக்குச் சிற்றுண்டிகளும் வழங்கப்படுகின்றன. இச்சேவையில் தலா ஆறு பேரை ஏற்றிச் செல்லக்கூடிய நான்கு படகுகளை கடற்படையினர் ஈடுபடுத்தியுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.



பொதுசன நூலகம்
... மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் இலங்கை நோக்கிப் படையெடுப்பு

## இந்தியப் பயணிகளே முன்னணியில் உள்ளனர்



(கொழும்பு)

2011 ஆண்டு முதல் காலாண்டு பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளில் பெரும்பாலானவர்கள் இந்தியாவில் இருந்தே வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையின் படி இந்தக் காலப்பகுதியினுள் 37 ஆயிரத்து 476 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த வருட காலாண்டில் 43.4 சதவீதமாக அதிகரித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கு அடுத்ததாக பிரித்தானியாவில் இருந்தே அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளதாகவும், அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த காலங்களில் குறைந்தளவிலேயே அமைந்திருந்தது.

ஆனால், இந்த வருட காலாண்டில் வியக்கத்தக்க வகையில் 3 ஆயிரத்து 829 பாகிஸ்தானிய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர். இதேவேளை, இந்த வருடத்தில் சர்வதேச ரீதியாக 7 லட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருவர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

# கரம்பனில் நண்டு வளர்ப்பு அமைச்சர் டக்ளஸ் ஊக்குவிப்பு



(கரம்பொன்)

ஊர்காவற்துறை - கரம்பனில் அமைந்துள்ள நண்டு வளர்ப்புத் திட்டத்தை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத்தொ ழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பார்வையிட்டார்.

கரம்பன் பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர், அங்குள்ள நண்டு வளர்ப்புத் திட்டத்தை பார்வையிட்டதுடன், அது தொடர்பாக துறைசார்ந்தோரிடம் கேட்டறிந்து கொண்டார். இத்திட்டத்தில் தற்போது 400க்கும் மேற்பட்ட நண்டுக் குஞ்சுகள் வளர்க்கப்படுவதாகவும், இதன்மூலம் எதிர்காலத்தில் பெருமளவு இலாபத்தை ஈட்ட முடியும் என்றும், திட்டத்திற்கு பொறுப்பாகவுள்ள மரியாம்பிள்ளை தவம் தெரிவித்துள்ளார்.

இந்நண்டு வளர்ப்புத் திட்டத்திற்கான பல்வேறு உதவித் திட்டங்களையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் தொலைபேசி பாவனை பெரிதும் அதிகரிப்பு



(கொழும்பு)

இலங்கையில் தொலைபேசி பாவனை துரிதமாக அதிகரித்துச் செல்வதாக தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழிநுட்ப அமைச்சு குறிப்பிடுகின்றது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் முதற் பகுதியிலேயே தொலைபேசிப் பாவனை 15 தொடக்கம் 20 வீத மாக அதிகரித்துள்ளதாக அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய சுட்டிக்காட்டினார். நாட்டின் சனத்தொகையில் 75 வீதமானவர்கள் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதாகவும் தொலைத் தொடர்புகள் மற்றும் தகவல் தொழிநுட்ப அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# இலங்கை மீது சர்வதேச அழுத்தம்; தவிர்ப்பதற்கு ஐ.தே.கட்சி யோசனை



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற மோசமான மனிதவுரிமை மீறல்கள் குறித்து உள்நாட்டில் காத்திரமான விசாரணைகளை மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்டிருந்தால், வெளிநாட்டு அழுத்தங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த தலைவர் லக்ஸ்மன் கிரியெல்ல வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக் குழுவுக்கு மனிதவுரிமை மீறல்கள் குறித்த விசாரணைகளை நடத்துவதற்கான ஆணை வழங்கப்படவில்லை.

புலிகளுடனான போர் நிறுத்தம் தோல்வி கண்டமைக்கான காரணங்கள் குறித்து ஆராய்வதற்கே உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

இதற்காக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை துரோகிகள் எனக் குறிப்பிடும் மகிந்த ராஜபக்ஷவே எமக்கெல்லாம் ஐக்கிய நாடுகள் சபையில் முறையிடுவது தொடர்பில் வழியை ஏற்படுத்தி விட்டவர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராக எதிர்க் கட்சியில் மகிந்த ராஜபக்ஷ இருந்தபோது, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரேமதாச தலைமையிலான அரசாங்கத்திற்கு எதிராக மனிதவுரிமைகள் ஆணைக்குழு வில் முறைப்பாடு செய்திருந்தார்.

அதேவேளை, சாட்சிகளுக்கு பாதுகாப்பு வழங்கும் சட்டம் இல்லாதொரு சூழலில் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு நேரத்தையும், பொதுச் சொத்துகளையும் வீணடிக்கின்றது என இச் செவ்வியில் லக்ஸ்மன் கிரியெல்ல விசனம் தெரிவித்துள்ளார்.

# சட்டங்களை மீறி நடக்கும் உள்ளூராட்சி உறுப்பினர்கள்

## மனித உரிமைகள் குழு கவலை



(கொழும்பு)

பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களில் பலர் பாரியளவில் சட்டங்களை மீறுவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றஞ்சுமத்தியுள்ளது.

இவ்வாறான நிலைமையினால் பொது மக்களின் உரிமைகள் மீறப்படுவதாக ஆணைக் குழுவின் செயலாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

எனவே அவ்வாறு சட்டங்களை மீறும் பிரதேசசபை உறுப்பினர்கள் தொடர்பாக தகவல்கள் கிடைத்தால் தமக்கு முறைப்பாடு செய்யுமாறு மனித உரிமைகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

பிரதேசசபை உறுப்பினர்களில் பலர் சட்டங்களை நடைமுறைப் படுத்துவதைவிடப் பல்வேறு அழுத்தங்களுக்கு ஏற்பவே செயற்படுவதாக ஆணைக்குழுவின் செயலாளர் குறிப்பிட்டார். குறிப்பாக செயற்திறன் அற்ற திட்டங்கள் காரணமாக சில பிரதேசங்களில் சட்ட விரோத கட்டடங்கள் நிர்மாணிக்கப்படுவதற்கு இதுவும் ஒரு காரணம் என அவர் தெரிவித்தார்.

# சம்பள உயர்வு வழங்க வேண்டும் இல்லையேல் போராட்டம் வெடிக்கும்

(கொழும்பு)

சம்பள உயர்வு கோரும் இலங்கை பல்கலைக்கழக ஆசிரியர்கள், தமது கோரிக்கை நிறை வேற்றப்படாவிட்டால், உயர்தர பரிசோதனை விடைத்தாள் திருத்தும் பணிகளை புறக்கணிக்கப் போவதாக எச்சரித்துள்ளனர்.

கடந்த பல ஆண்டுகளாக தமக்கு சம்பள உயர்வு எதுவும் வழங்கப்படவில்லை என்று கூறும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், யுத்தம் முடிந்த பின்னர் சம்பள உயர்வு வழங்கப்படும் என்று அரசாங்கம் உறுதியளித்திருந்ததாகவும், ஆனால் அதன் பின்னரும் எதுவும் நடக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டுகின்றது.

இது தொடர்பாக ஜனாதிபதி, உயர்கல்வி அமைச்சர், சம்பள ஆணைக்குழு உட்பட பலதரப்பினரிடமும் பேச்சு நடத்தப்பட்ட போதிலும், தமக்கு எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லை என்று இலங்கை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் பொருளாளரான டாக்டர் பவித்ரா கைலாசபதி தமிழோசையிடம் கூறினார்.

இதேவேளை, பல்கலைக் கழக ஆசிரியர்கள் க.பொ.த. உயர்தர பரீட்சை வினாத்தாள்களைத் திருத்தும் பணியை பகிஷ்கரிக்கும் பட்சத்தில், அவர்களுக்கு ஆதரவாக தாமும் அந்தப் பணியைப் புறக்கணிப்போம் என்று இலங்கைஆசிரியர் சங்கத்தின் செயலாளரான ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# நிர்வாண நடனம் சிறைவாசம் பரிசில்

(கொழும்பு)

பொது இடங்களில் தவறான முறையில் நடந்துக் கொண்ட குற்றச்சாட்டின் பேரில் பிரித்தானியாவில் வைத்து கைது செய்யப்பட்ட இலங்கையர் ஒருவருக்கு அந்நாட்டு நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

பிரித்தானியாவிலுள்ள பூங்கா ஒன்றில் பெண்கள் செறிந்திருக்கும் இடங்களில் நிர்வாணமான முறையில் நடமாடியமையை அடுத்தே குறித்த இலங்கையர் அந்நாட்டு பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட குறித்த இலங்கையர் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்தே இவருக்கு சிறைத்தண்டனை வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

குறித்த இளைஞர் நிர்வாணமாக நடமாடியமை மன்னிக்கக் கூடிய விடயம் அல்ல என தெரிவித்த நீதிமன்றம், அவருக்கு இரு வருடங்கள் சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது. அத்துடன், குறித்த இலங்கையர் மனநல பரிசோதனை செய்துக் கொள்ள வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

## யாழ். நகரில்....

நோயின் தாக்கம் கட்டுப்பாட்டில் இருப்பது உறுதிப்படுத்தப் பட்டது. இவ்வாறான நிலையினை மேலும் மேம்படுத்தும் நோக்கில் கடந்த 6 ஆம் திகதியன்று வைத்தியசாலைகள் உட்பட டெங்கு நோயின் தாக்கம் ஏற்படக்கூடிய பகுதிகளில் புகையூட்டும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் கடந்த 8, 9ஆம் திகதிகளில் டெங்கு நுளம்பு பெருக் கத்திற்கு ஏதுவான இடங்களில் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதுன. குருநகர், யாழ். நகர பஜார் பகுதிகளில் இவ்வாறான சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## இலங்கையின்...

உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் அனர்த்த நேரங்களில் அளப்பரிய உதவிகளை வழங்கியிருக்கின்றனர். உதவிகளை வழங்கிய சகல தரப்பினருக்கும் தனிப்பட்ட ரீதியிலும் ஜப்பானிய மக்களின் சார்பிலும் நன்றிகளை தெரிவிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

... இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் ... வெளியிடப்பட்டது

12) 01. 927 ரூபாவை மூன்று பேருக்கு சமமாகப் பங்கிடும்போது ஒருவர் பெறும் பணத்தின் அளவு யாது?

..........................................................................................

02. கரன் 1 லீற்றர் 750 மில்லிலீற்றர் எண்ணையையும் கரன் வாங்கியதன் இருமடங்கு எண்ணெயைத் தீபனும் வாங்கினான். இருவரும் வாங்கிய எண்ணெயின் மொத்த அளவு யாது?

..........................................................................................


03. 50 பைக்கற்றுக்கள் கொண்ட பால்மாப் பெட்டி ஒன்றின் நிறை 12 Kg 750g ஆகும். 450 பைக்கற்றுக்கள் கொண்ட பால்மாப் பெட்டியின் நிறை யாது?

..........................................................................................


04. ஒரு Kg தேயிலையின் விலை 160 ரூபா ஆகும். 2Kg 250g தேயிலை வாங்கி 500 ரூபாவைக் கொடுத்தால் மிகுதிப் பணம் எவ்வளவு?

..........................................................................................

05. பின்வரும் உருவிலுள்ள ஒவ்வொரு சிறிய சதுரத்தினதும் ஒரு பக்கத்தின் நீளம் 1 சென்ரி மீற்றர் ஆகும்.



06.




மேலே தரப்பட்ட A,B ஆகிய இரண்டு கீலங்களினதும் மொத்த நீளம் யாது?

07. ஒரு குதிரை மணித்தியாலத்திற்கு 20Km அவேகமாக ஓடும். 8 மணித்தியாலத்தில் எத்தனை Km ஓடி முடிக்கும்?

..........................................................................................

08. 2/4 + 1/2 =


09. 1Kg வாழைப் பழத்தின் விலை ரூபா 60.00 ஆகும். 1Kg 250g வாழைப்பழத்தின் விலை யாது?

..........................................................................................

10. ஒரு மண்ணெண்ணைக் கானில் 6L 500ml மட்டும் நிரப்பலாம். அப்படியானால் எத்தனை கானில் 39L நிரப்பலாம்?

..........................................................................................

**13) பாடசாலை விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த மாதவனுக்கும் அவனது தோழர்களுக்கும் கிடைத்த அனுபவம் ஒன்றை அவன் படமாக வரைந்துள்ளான். அதனை அவதானித்து அச்சம்பவத்தை ஆறு வாக்கியங்களாக எழுதுக.**



01. ..........................................................................................

02. ..........................................................................................

03. ..........................................................................................

04. ..........................................................................................

05. ..........................................................................................

06. ..........................................................................................

**எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் வினாத்தாள்களைப் பெற்று பயன்பெறும் மாணவர்களுக்கு அரசால் நடத்தப்படும் பரீட்சையில் முன்னணியில் உள்ள மாணவர்கள் கல்விமுரசு வாராந்தப் பயிற்சிபெற்ற வினாத்தாள்களை உறுதிப்படுத்தின் துவிச்சக்கர வண்டிகள் மற்றும் பெறுமதிமிக்க பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும்.**



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - II

1மணி 15 நிமிடம்

# கல்வி முரசு

வெளியீடு 09



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**01) கீழே தரப்பட்ட பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

மலைகளிலிருந்து சிறுசிறு நீர் ஊற்றுக்களாகத் தோன்றி அவற்றின் மூலம் வெளிவரும் நீரானது ஒன்று சேர்ந்து சிறுசிறு அருவிகளாக உருப்பெறுகின்றன. இச்சிறு அருவிகள் ஒன்றுசேர்ந்து ஆறுகளாகி அவை கடலைப் போய்ச் சேருகின்றன. ஆறு தரையில் ஓடும்போது அது காடு, மலை எல்லாம் தாண்டிச் செல்ல வேண்டியுள்ளது. அப்போது அவை சில இடங்களில் பெரும் பள்ளத்தில் விழ வேண்டியும் ஏற்படுகின்றன. அப்படி ஆறு பள்ளங்களில் விழும் காட்சியானது மிக அழகானது. அவ்விடத்தை நீர் வீழ்ச்சி என்று அழைப்போம். தலவாக்கலைக்கு அருகில் உள்ள டெவன் நீர் வீழ்ச்சியைப் பார்த்தீர்களானால் இது உங்களுக்குப் புரியும். சில இடங்களில் ஆறு, பாம்பு போல வளைந்து வளைந்து ஓடுவதையும் காணலாம்.

01. ஆறுகள் எங்கே உற்பத்தியாகின்றன?

..........................................................................................

02. ஆறு கடைசியாக எங்கே போய்ச் சேருகின்றது?

..........................................................................................

03. கொழும்பை வந்தடையும் ஆற்றின் பெயர் என்ன?

..........................................................................................

04. மிருகங்கள் ஏன் ஆற்றை நோக்கிச் செல்கின்றன?

..........................................................................................

05. நீர்த் தேக்கங்களை எவ்விடத்தில் கட்டுகிறார்கள்?

..........................................................................................

06. ஆற்றில் மனிதர்கள் அள்ளும் திண்மப் பொருள் எது?

..........................................................................................

07. ஏன் நீர்த்தேக்கங்களைக் கட்டுகிறார்கள்?

..........................................................................................

08. நீரைச் சுத்தப்படுத்தப் பயன்படுத்தப்படும் பொருள் என்ன?

..........................................................................................

**02) அடைப்புக்குள் உள்ள பொருத்தமான சொல்லைக் கொண்டு இடைவெளியை நிரப்புங்கள்.**

01. “கவிஞன்” பாட்டை (பாடினான்/இயற்றினான்)

..........................................................................................

02. பசுக்கன்று தன் தாயைக் கண்டு (கத்தியது/கூவியது)

..........................................................................................

03. மேடையில் நின்ற அவன் (பாடினான்/படித்தான்)

..........................................................................................

04. திக்குத் தெரியாத காட்டில் அவன் அலைந்து (திரிந்தான்/நடந்தான்)

..........................................................................................

05. அவரசமாக அவன் தன் நடையைக் (திரிந்தான்/கட்டினான்)

..........................................................................................

**03) பின்வரும் தொடர்களால் உணர்த்தப்படும் கருத்தை எழுதுக.**

01. கலலில நாருரிததல :..........................................................................................

02. ஊமை கண்ட கனவு

**04.** பொருத்தமான "அ" பகுதியுடன் "ஆ" பகுதியை இணைக்க.

| அ | ஆ |
|---|---|
| 1. வைக்கோல் | 1. வயலில் நெல் அறுவடையின் பின் எஞ்சும் பகுதி |
| 2. சிவனொளிபாத மலை | 2. மழையும் வெயிலும் ஒன்றாக வரும்போது தோன்றுவது |
| 3. குர்ஆன் | 3. முஸ்லிம்களின் புனிதநூல் ஒன்று |
| 4. வானவில் | 4. வணக்கஸ்தலம் ஒன்று |

**05. கருத்தினைத் தமிழில் எழுதுக.**

01. Look at me
02. Good evening
03. Break fast

**06. சிங்களச் சொற்களின் கருத்தினைத் தமிழில் எழுதுக.**

01. கெதர யன்ன
02. கரவில
03. பன்சலய

**07. சரியான விடையின் கீழே கோடிடுக.**

01. பின்வருவனவற்றுள் இரவு நேரத்தில் இலைகள் சுருங்கும் தாவரம் எது?
1. முருங்கை 2. தாமரை 3. கறிவேப்பிலை 4. அகத்தி

02. பின்வருவனவற்றுள் அயடீன் குறைபாட்டினால் ஏற்படும் நோய் எது?
1. தொண்டைக்கரப்பான் 2. நீரிழிவு 3. கண்டமாலை 4. யானைக்கால்

03. பின்வரும் விடைகளுள் தேசப்படங்களில் பெருந்தெருக்களைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நியம நிறம் எது?
1. கறுப்பு 2. நீலம் 3. பச்சை 4. சிவப்பு

04. நுகர்வுக்கான வர்த்தகப் பொருட்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் இலங்கையின் இலச்சினை எது?
1. SLS 2. SOS 3. ISO 4. ISBN

05. தொல்பொருட்கள் பெறுமதி மிக்கதாகவும் கலைத்துவப் பெறுமதி மிக்கதாகவும் உள்ள இடம்?
1. எம்பிலிப்பிட்டிய 2. சிகிரியா 3. பாணம 4. கொத்மலை

06. இரவு நேரத்தில் மலரும் பூ வகை எது?
1. நந்தியாவட்டை 2. தாமரை 3. நான்கு மணிப்பூ 4. கடுபுல்

07. எலுமிச்சைப் பழச்சாற்றில் அதிகளவில் இருக்கும் போசனைப் பதார்த்தம் யாது?
1. கொழுப்பு 2. புரதம் 3. விற்றமின் C 4. கல்சியம்

08. கரப்பந்தாட்டக் குழு ஒன்றுக்குரிய வீரர்களின் எண்ணிக்கை யாது?
1. ஆறு 2. ஏழு 3. பத்து 4. பன்னிரண்டு

09. நத்தை முட்டையின் நிறம் யாது?
1. வெள்ளை 2. மஞ்சள் 3. சிவப்பு 4. கபிலம்

10. எமது தேசிய விளையாட்டு எது?
1. சடுகுடு 2. எல்லே 3. கிரிக்கெட் 4. கரப்பந்தாட்டம்

**08. அடைப்பினுள் உள்ள சொற்களினுள் இருந்து திருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து கீறிட்ட இடங்களை நிரப்பு.**

| | | | | |
|---|---|---|---|---|
| பள்ளிவாசல் | நாம்புவ | தைனமோ | மடி | காக்கும் பலகை |
| பத்திரிப்பு | பாதட்டியல் | மின்சுருள் | மின்உயர்த்தி | மஸ்ஜித் |


01. உயரமான கட்டடத்தின் மேல்மாடிக்கு இலகுவாகச் செல்லப் பயன்படுத்தப்படும் சாதனம் எது?
.................................................................................................
02. சைக்கிள் விளக்கினுக்கு மின்சக்தியை வழங்கும் உபகரணம் எது?..........................
03. வலையில அகபபடும மனகள மூலையின பெயா யாது?..........................
04. இஸ்லாம் மார்க்கத்தினரின் சமய வழிபாட்டின் பெயர் என்ன?..........................
05. அகழ்வுக் கைத்தொழில் மாணிக்கக் கற்கள் தாதுக்கள் கொண்ட கூடையின் பெயர் யாது?
.................................................................................................





**09. தாவரத்தின் பெயரை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்க.**

| | | | |
|---|---|---|---|
| அகத்தி | ஊமத்தை | குன்றிமணி | கண்டங்கத்தரி |
| பிரண்டை | நெருஞ்சி | நெல்லி | கத்தரி |



(.............................) (.............................) (.............................) (.............................)

**10. பின்வருவனவற்றின் பெயர்களை அடைப்புக்குறியில் இருந்து தெரிவுசெய்க.**


| | | | | |
|---|---|---|---|---|
| கும்பிடு பூச்சி | வண்டு | தேனீ | சிலந்தி | இலையான் |



(.............................) (.............................) (.............................) (.............................)

**11. பின்வரும் வரைபைக் கொண்டு அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.**

இவ்வரைபானது 6 ஓவர்களில் A,B ஆகிய இரு குழுக்கள் பெற்றுக்கொண்ட ஓட்ட எண்ணிக்கை ஆகும். வரைபானது பெறப்பட்ட ஓட்டங்களின் எண்ணிக்கைக்கும் விளையாட்டு வீரர்களின் இலக்கத்திற்கும் எதிராக வரையப்பட்டுள்ளது.




01. ஆறு ஓவர்களிலும் குறைந்தளவான ஓட்டத்தைப் பெற்ற அணி எது?

எத்தனை ஓட்டங்களைப் பெற்றது?

02. குறைந்த ஓட்டத்தைப் பெற்ற வீரர் எந்தக் குழுவில் இருக்கின்றார்?

03. B குழுவில் 1,2 வீரர்கள் இருவரும் பெற்ற ஓட்ட எண்ணிக்கைக்குச் சமனான ஓட்ட எண்ணிக்கையைத் தனியாகப் பெற்றவர் யார்?

04. B குழுவில் அதிக புள்ளிகளைப் பெற்றவரினதும் குறைந்த புள்ளியைப் பெற்றவரினதும் இடையிலான வித்தியாசம்

அவர் எக்குழுவில் உள்ளார்?

05. இவ்விரண்டு குழுக்களிலும் வெற்றிபெற்ற குழு, தோல்வி பெற்ற குழுவைவிட எத்தனை புள்ளிகள் அதிகமாகப் பெற்றுள்ளது?